Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field


உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி– 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 றஜப் 28 (03.09.2005) வெள்ளிக்கிழமை இதழ்:338

# சிறப்புற நடைபெற்ற நல்லூர் இரதோற்சவம்!





யாழ்ப்பாணம் —

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த இரதோற்சவத்தில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

நேற்றுக்காலை விசேட பூஜை ஆராதனையைத் தொடர்ந்து, வசந்த மண்டப பூஜை நடைபெற்று காலை 7.30 மணிக்கு முருகப்பெருமான் இரதத்தில் எழுந்தருளி வீதியுலா வந்தார்.

காலை 8.30 மணிக்கு தேரில் சிறப்புப் பூஜைகள் நடைபெற்ற பின்னர் ஆறுமுகப்பெருமான் இருப்பிடம் சென்றடைந்தார்.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் சிறப்புற நடைபெற்ற இரதோற்சவத்தை தரிசிப்பதற்காக குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிமாவட்டங் களில் இருந்தும், புலம்பெயர்ந்த தாயக மக்களும் என பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

இதேவேளை - நல்லூர்க் கந்தனின் இரதோற்சவத்தைக் காணவந்த பெருந்திரளான பக்தர்களின் நெரிசல்களை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட திருடர்களால் 62 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டன.

பக்தர்களோடு பக்தர்களாக இருந்தவர்களாலேயே நகைகள் களவாடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறு களவாடப்பட்ட 62 பவுண் நகைகளில் - 3 தாலிக்கொடிகள், 9 சங்கலிகள், இரண்டு கைச்சங்கிலிகள் என்பன அடங்கும்.

இதேவேளை -பின்பொக்கட் அடித்த ஒருவர் கையும் மெய்யுமாக கலாசாரம் பேணும் குழுவால் பிடிக்கப்பட்டார்.

# வான் பாதுகாப்பு சாதனங்களை சீனாவிடம் வாங்க அரசு முயற்சி!

## சந்திரிகாவின் விஜயத்தின்போது பேச்சு

## தேர்தலில் வெற்றி பெற்றால் புலிகளுடன் நேரடிப் பேச்சு!

# சந்திரிகாவின் விஜயத்தின்போது பேச்சு

பீஜிங் —

சீனாவிடம் இருந்து வான் பாதுகாப்பு சாதனங்களை இலங்கை அரசு பெற்றுக் கொள்ளவிருப்பதாகவும் - இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் சீனப் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையிலான பேச்சுக்கள் பீஜிங்கில் இடம் பெற்றதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இரண்டு நாள் விஜயமாக சீனாவுக்குச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா, வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டார நாயக்க உள்ளிட்ட இலங்கைக் குழுவினர் - சீன ஜனாதிபதி, சீனப் பிரதமர், சீனப் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் காஓ கஸ் சோனுடன் ஜனாதிபதி சந்திரிகா நடத்திய பேச்சுக்களின் போது இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்புத் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டிருந்தது.

இதன்போது - புலிகளிடம் இரண்டு விமானங்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால், நாடு பெரும் அச்சுறுத்தலுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் வெற்றி பெற்றால் புலிகளுடன் நேரடிப் பேச்சு!

### அனுசரணையாளர் தேவையில்லை என்கிறார் மகிந்த



கொழும்பு —

ஜனாதிபதியாகத் தான் தெரிவு செய்யப்பட்டால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் - அனுசரணையாளர்கள் இல்லாமல் பேச்சு நடத்தப்போவதாக பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் எஸ். அருள்சாமி தலைமையிலான (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை!

கொழும்பு —

கம்பஹா மாவட்டத்திலுள்ள வென்னப்புவவில் மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை சுட் டுக் கொல்லப்பட்டார்.

கல்முனையைச் சேர்ந்த நகுலேசன் பரத் (வயது 35) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

மாபிள் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நடத்திவந்த இவர், தனது வீட்டிலிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள இளைஞர் சடலமாக மீட்பு!

திருகோணமலை —

திருகோணமலை - உப்புவெளிப் பகுதியில் சிங்கள இளைஞர் ஒருவர் வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

திருமலை உப்புவெளி தண்ணீர் தாங்கிக் கருகில் சடலமொன்று இருப்பதாக நேற்றுக் காலை 9.15 மணியளவில் தகவல் கிடைத்ததையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் வெட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலத்தை மீட்டனர்.

கொல்லப்பட்டவர் சிறிமாபுரவைச் சேர்ந்த பிரதீப்குமார (வயது 30) என அடையாளம் காணப்பட்டார். திருமலை நகரில் சட்டவிரோதமாகப் புத்தர்சிலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னைய நிலையில் இருந்து புலிகள் கீழிறங்கி விடவில்லை!

### புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்



கிளிநொச்சி —

விடுதலைப் புலிகள் முன்னைய நிலைகளில் இருந்து கீழிறங்கிவிட்டதாக கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துவரும் கருத்துக்கள் தவறானவை என விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

தமிழ் நெற் இணையத்தளத்துக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாஷைகளை அரசியல் ரீதியாக சர்வதேச சமூகத்திடம் வெளிப்படுத்தும் நோக்கத்தில் அரசியல் முதிர்ச்சியுடன் நாம் செயற்பட்டு வருகின்றோம். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுகளுக்கு பொருத்தமான இடம் தேடுகின்றது நோர்வே!

கொழும்பு —

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பேச்சுக்களை நடத்துவதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்வுசெய்வது குறித்து நோர்வே அனுசரணையாளர்கள் கவனம் செலுத்திவருவதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

போர்நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களுக்குப் புலிகள் இணக்கம் தெரிவித்ததை அடுத்து அவர்கள் ஒஸ்லோவில் பேச்சு நடத்தலாம் என்று யோசனை தெரிவித்திருந்தனர்.

ஆனால் வெளிநாடுகளில் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தமுடியாதென அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்ததுடன் இராணுவ சூனியப் பிரதேசமான ஓமந்தையில் அல்லது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பேச்சுக்களை நடத்தலாம் என்று அறிவித்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் தாக்கி இரு மீனவர்கள் காயம்!

பருத்தித்துறை —

காங்கேசன்துறை கடற்பரப்புக்கு மேலாக கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த இரு மீனவர்கள், கடற்படையினரால் தாக்கப்பட்டு, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வடமராட்சி - பொலிகண்டியைச் சேர்ந்த மீனவர்கள் இருவர், நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு காங்கேசன்துறை கடற்பரப்புக்கு மேலாக, படகொன்றில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தபோது - (12 ஆம் பக்கம் பார்க்க)

## பனையிலிருந்து வீழ்ந்து சீவல் தொழிலாளி பலி!

நெல்லியடி —

பனை மரத்தில் இருந்து தவறிவீழ்ந்த சீவல் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கரணவாய் - அண்ணா சிலையடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை தர்மரட்ணம் (வயது -47) என்ற சீவல் தொழிலாளியே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி சீவல் தொழிலாளி தனது வீட்டுக்கு அருகில் இருக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி வலய ஆங்கிலதின போட்டிகள்

வடமராட்சி

வடமராட்சி வலயமட்ட ஆங்கில தினப் போட்டிகள் இன்றும், நாளையும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு போட்டிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, 8 ஆம் வகுப்புக்கான ஆக்க எழுத்துப் போட்டியும், சொல்வதெழுதல் போட்டியும், 9 ஆம் வகுப்புக்கான பார்த்து உறுப்பெழுத்துப் போட்டியும் இன்று நடைபெறமாட்டாது. இவர்களுக்கான போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி 2.30 மணிக்கு வட. இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு கனிஷ்ட பிரிவுக்கான நாடகப் போட்டியும், பிற்பகல் 3 மணிக்கு சிரேஷ்ட பிரிவுக்கான நாடகப் போட்டியும், நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்தார்.

(12)

# வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்தோர் விபரம்

கிளிநொச்சி

வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் விபரங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

வீரச்சாவடைந்த மாவீரர்களின் விபரம் வருமாறு -

03.08.2005 அன்று ஆற்றில் மூழ்கி லெப். கேணல் முரளிதரன்/ நிருஜன் (தர்மபாலன் - கஜரூபன்) புளியங்குளம் வீதி, நெடுங்கேணி என்ற போராளி சாவடைந்தார்.

16.09.1994 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நெடுஞ்சேனை என்ற இடத்தில் இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரவேங்கை வடிவேல் (தர்மலிங்கம் - வடிவேல்) திருப்பளுகாமம் 01, பெரிய போரதீவு, மட்டக்களப்பு.

30.05.1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியில் அதிரடிப்படையினரின் சூட்டுக்கு இலக்காகி வீரவேங்கை மோகன் (குமாரசிங்கம் - குலமோகன்) கடற்கரை வீதி, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.

1990 ஆம் ஆண்டு மாங்குளம் பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரவேங்கை மதன் (அன்னத்துரை மேகநாதன்) காளிகோவில் வீதி, தேவாபுரம், முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு.

ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

# பணிநிலை வெற்றிடத்திற்கான நேர்முகத்தேர்வு

155 ஆம் கட்டை பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவன தலைமைப் பணிமனையில் AUP திட்டத்துக்கு (21) மாதங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் பணிநிலைக்கு ஆளணி நியமிப்பது தொடர்பான நேர்முகத்தேர்வு 07.09.2005, 08.09.2005 ஆம் திகதிகளில் புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய இரு நாட்களும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் நடைபெறவுள்ளதனால் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமையுடையோர் சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**01) தொழில்நுட்ப உத்தியோகத்தர் :-**

i. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ்.
ii. கல்வித் தகைமைச் சான்றிதழ்.
iii. ஆகக்குறைந்தது 5 வருடங்கள் ஏதாவது நிறுவனத்தில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iv. ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவராக இருக்கவேண்டும்.
v. ஏனைய தகுதிகள் இருப்பின் விரும்பத்தக்கது.

**02) சிரேஷ்ட வெளிக்கள அலுவலர் - 03**

i. கல்விச் சான்றிதழ்.
ii. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
iii. ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
iv. அனுபவச் சான்றிதழ்.
v. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 25 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**03) நிதி முகாமையாளர் - 02**

i. கல்விச் சான்றிதழ்.
ii. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமாணிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
iii. ஆங்கிலம் எழுத, பேசத் தெரிந்திருத்தல் வேண்டும்.
iv. அனுபவச்சான்றிதழ்.
v. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 25 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**04) வெளிக்கள அலுவலர் - 08**

கல்வித்தகைமைகள் :- i. க.பொ.த. உ/த கற்றிருத்தல் வேண்டும்.
ii. முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 25 வயது தொடக்கம் 40 வயது வரை.

**05) உளவள/ பாலின உதவியாளர் - 03**

i. இத்துறையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றிய முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
ii. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
iii. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 20 வயது தொடக்கம் 40 வயது வரை.

**06) நிர்வாக உதவியாளர் - 02**

i. க.பொ.த. சா/த சித்தியடைந்திருத்தல்.
ii. நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iii. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 30 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**07) களஞ்சியப் பொறுப்பாளர் - 02**

i. க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் பயின்றிருத்தல் வேண்டும்.
ii. ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள் ஏதாவது நிறுவனத்தில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iii. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 30 வயது தொடக்கம் 45 வயதுவரை.

**08) கணக்குப் பதிவாளர் - 02**

i. க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகம் பயின்றிருத்தல் வேண்டும்.
ii. கணக்கியலில் திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
iii. ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகள் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iv. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 20 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**09) சமூக அலுவலர்கள் - 08**

i. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ii. ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களாயினும் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iii. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 25 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**10) காவலாளிகள் - 03**

i. 08 ஆம் தரம் பயின்றிருத்தல் வேண்டும்.
ii. நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 30 வயது தொடக்கம் 40 வயது வரை.

**11) பராமரிப்பாளர்கள் - 03**

i. ஆகக்குறைந்தது 05 ஆம் தரம் பயின்றிருத்தல் வேண்டும்.
ii. நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 30 வயது தொடக்கம் 50 வயதுவரை.

குறிப்பு :- 01. இருபாலாரும் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கலாம்.
02. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
03. இத்திட்டம் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைறைப்படுத்தப் படவுள்ளதால்அந்தந்த மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

[C/4558]

# சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள கோரிக்கை

கிளிநொச்சி

29.04.2005, 30.04.2005 ஆகிய திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையின்போது, சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் சாரதி அனுமதிப் பத்திர கணினி அட்டைகள் கிளிநொச்சி செயலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் - 06.09.2005 இற்கு பின்னர் அலுவலக நாட்களில் மாவட்ட செயலகத்துக்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

# பஸ் சேவை நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை - நேற்று முதல் 04 ஆம் திகதி ஞாயிறு வரை கடைசி பஸ் சேவையை இரவு 9 மணிவரை நீடித்துள்ளது.

நல்லூர் உற்சவத்திற்கு செல்லும் பக்தர்களின் நன்மைகருதி இந்தச் சேவை நீடிக்கப்பட்டுள்ளது. இன்றும், நாளையும் யாழ். பஸ்நிலையத்திலிருந்து இரவு 9 மணிவரை பஸ் சேவை நடைபெறும்.

இதேவேளை, மானிப்பாய் வீதி, கே.கே.எஸ்.வீதி வழியாக செல்லும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் அனைத்து பஸ்களும் இன்றும், நாளையும் கந்தர் மடம் சந்தி ஊடாகவே சேவையை மேற்கொள்ளும்.

# நல்லூரில் இன்று

மானிப்பாய்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, இன்று காலை 7 மணிக்குத் தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது.

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் - தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு கே. இராமநாதனின் இசைக் கைச்சேரி இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - வயலின் - எம்.விஸ்வமூர்த்தி, மிருதங்கம் - எஸ்.துரைராஜா, கடம் - ஏ.செல்வரத்தினம் ஆகியோர் இசைக்கவுள்ளனர்.

(100)


மனோகரா யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி, ரேணுகாமேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த




(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)

அடுத்த வெளியீடு:- 09.09.2005 முதல் சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த தொட்டி ஜெயா

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

டொல்பி ஒலிநயத்துடன் விக்ரம், சதா, விவேக் மற்றும் பலர் நடித்த

அந்நியன்



காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

சுரேஸ்கோபி, மஞ்சு, விஜய்மேனன், விமல்ராஜ் மற்றும் பலர் நடித்த

பத்ரம்

விரைவில்... சூர்யா, கஜனி கஜினி

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

காதல் புகழ் பரத், ரேணுகாமேனன் நடித்த



பெப்ரவரி 14

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதஜ்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சத்தியராஜ், வடிவேல், நமீதா நடித்த நகைச்சுவை நிறைந்த திரைப்படம்



இங்கிலீஷ்காரன்


# அறிவித்தல்

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கொடிகாமம்

**கூட்டுறவுச் சட்ட விதி (18) (1)இன் கீழான விசேட பொதுக்கூட்டம்**

மேற்படி கூட்டம் 04.09.2005 அன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு சங்கத் தலைமை அலுவலகத்தில் அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் திரு.த.செல்வசோதி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. பொதுச் சபை உறுப்பினருக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காவிடினும் இவ்வறிவித்தலை ஏற்று கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்
கொடிகாமம்.
02.09.2005

செயலாளர்.

(C/4563)

# ஹெல உறுமயவின் ஆதரவு யாருக்கென்று முடிவில்லை!

## அத்துரலிய ரத்னதேரர்



கொழும்பு —

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில், எவருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து முடிவு எடுக்கப்படவில்லையென ஜாதிக ஹெல உறுமயவின் நடாளு மன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக நடத்தப்பட்ட பேச்சுகள் போதுமானதாக இருக்கவில்லையெனவும், மீண்டும் ஐ.தே.கட்சி அழைப்பு விடுத்தால் பேச்சு நடத்த தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சுக்களில் ஜாதிக ஹெல உறுமய முன்வைத்த பஞ்ச தர்மக் கொள்கையின் சில விடயங்களில் பிரதமர் உடன்பாடு தெரிவித்தார். இந்தப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

இரண்டு பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களும், ஜாதிக ஹெல உறுமயவுடன் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்தாலும், தொடர்ச்சியாக நடத்தப்படும் கலந்துரையாட்லில் பயனற்ற தன்மை காணப்படுமாக இருந்தால் -ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவதற்கான சாத்தியம் உள்ளது.

எதிர்வரும் நான்காம் திகதி கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கட்சி எடுக்கவுள்ள தீர்மானம் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து அறிவிக்கப்படுமெனவும் அவர் கூறினார். (தே)

# நீதிமன்றம் வருவதிலிருந்து ரத்வத்தைக்கு விலக்கு!

கொழும்பு —

உடத்தலவின்ன படுகொலை வழக்கு விசாரணைகளுக்குச் சமுகமளிக்காமல் இருக்க முன்னாள் பிரதி பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்தவத்தவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உடத்தலவின்ன வழக்கு விசாரணை தற்போது நாளாந்தம் நடைபெற்று வரும் நிலையில், முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காமல் இருக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளபோதிலும், அவரின் சார்பில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ நாளாந்தம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்துக்குள்ளேயோ அல்லது நீதிமன்றத்துக்கு வந்து செல்லும் வழியிலோ அனுருத்த ரத்வத்தையைப் படுகொலை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் புலனாய்வுப்பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக, பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளதால் அனுருத்த ரத்வத்தை நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காமல் இருக்க அனுமதியளிக்குமாறு அவரின் சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ நீதி மன்றத்தில் விடுத்த வேண்டுகோளுக்கமையவே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

# மலையக மக்கள் முன்னணியின் ஒருசாரார் பிரதமருக்கு ஆதரவு!

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மலையக மக்கள் முன்னணியின் ஒரு சாரார், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இது தொடர்பாகப் பேச்சு நடத்தப்பட்டது.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய மகாண சபை உறுப்பினர்களான எஸ். அருள்சாமி, திகாம்பரம் உட்பட, நூறு உறுப்பினர்கள் பிரதமருக்கான ஆதரவை வெளிப்படுத்தினர்.

மலையக மக்களுக்கு பிரஜா உரிமையை, சத்தியக் கடதாசி முறையில் இருந்து மாற்ற வேண்டும். தனித் தனிக் குடியிருப்புக்கள் அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளைப் பிரதமர் ஏற்றுக்கொண்டதையடுத்தே, அவருக்குத் தாம் ஆதரவளிக்க முன் வந்ததாக இவர்கள் தெரிவித்தனர்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் சமாதானப்பேச்சு நடத்தக்கூடாது!

## கருத்துக்கணிப்பில் 67 வீதமானோர் தெரிவிப்பு

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், சமாதானப் பேச்சுக்களை நடத்தக் கூடாதென்று தொலைக்காட்சி நிறுவனமொன்று நடத்திய கருத்துக் கணிப்பில் - 67 வீதமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

லங்காதீப பத்திரிகை மற்றும் மெசென்ஜர் நிறுவனத்தின் அனுசரணையுடன், தனியார் தொலைக்காட்சி நிறுவனமான சுவர்ணவாஹினி நடத்திய இந்தக் கருத்துக்கணிப்பின் போதே தேர்தலுக்கு முன்னர் சமாதானப் பேச்சுக்குச் செல்ல வேண்டுமென்று 731 பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது கருத்துக் கணிப்பில் கலந்துகொண்டோரில் 33 வீதமாகும்.

தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் சமாதானப் பேச்சு மேசைக்குச் செல்லக்கூடாதென்று, 1,499 பேர் கருத்துத் தெரிவித்தனர். இது கருத்துக் கணிப்பில் கலந்துகொண்டோரில் 67 வீதமாகும்.

அதற்கமைய பெரும்பாலானவர்களின் கருத்து தேர்தலுக்கு முன்னர் சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படக் கூடாதென்பதாகும்.

2,641 பேர் தங்களின் கருத்துகளைத் தெரிவித்திருந்தனர். இதில் 411 பேரின் கருத்துகள் நிராகரிக்கப்பட்டன. தொலைபேசி ஊடாக இந்தக் கருத்துக் கணிப்பு கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின்

# பாதுகாப்பு வாகனம் மோதி இளைஞர் ஒருவர் பலி!

கொழும்பு —

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்ன சிறி விக்கிரமநாயக்கவின் பாதுகாப்புக்காகச் செல்லும் படையினரின் வாகனம் மோதியதில் 18 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை களுத்துறை - கட்டுக்குருந்தையில் நடைபெற்ற விசேட அதிரடிப்படையினரின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்கவின் பாதுகாப்பு வாகனத் தொடரணியே இந்த இளைஞர் மீது மோதியது.

பிரதியமைச்சர் செல்லும்போது ஏனைய வாகனங்களின் போக்கு வரத்தை நிறுத்தி, அவரின் வாகனத்துக்கு வழிவிடப்பட்டது. பிரதியமைச்சரின் வாகனமும் மற்றுமொரு வாகனமும் சென்றதை அடுத்து வீதியோரத்தில் நின்றிருந்த சைக்கிளில் வந்த இளைஞர், தனது சைக்கிளுடன் பாதையின் குறுக்கே வந்தபோது பின்னால் வந்த அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவினரின் வாகனத்தில் மோதுண்டு அந்த இடத்திலேயே பலியானார்.

இது தொடர்பாக மொறட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# நீதிமன்றத்துக்கு அருகே சிறைக்கைதி மீது சூடு!

கொழும்பு —

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்கருகே நேற்று முன்தினம் காலை 11.35 மணியளவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில், பாதாள உலகக் குழுத் தலைவரான மொகமட் ரிஸ்வான் காயமடைந்தார்.

வழக்கு விசாரணையொன்றுக்காக வெலிக்கடை சிறையிலிருந்து பாதாள உலகக் குழுத் தலைவரான மொகமட் ரிஸ்வான் புதுக்கடை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

விசாரணை முடிவில் மீண்டும் சிறைச்சாலை பஸ்ஸில் அவர் ஏற்றப்படும்போது, மற்றுமொரு பாதாள உலகக் குழுத்தலைவரான தனுன்க என்பவர் ரிஸ்வான் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

கடுங்காயங்களுக்கு இலக்கான மொகமட் ரிஸ்வான் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மொகமட் ரிஸ்வான் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட தனுன்க கைது செய்யப்பட்டுள்ளார். (01)

# மஹிந்த - ஜே.வி.பி. இணைவது நிலையான சமாதானத்துக்கு பாதகம்

கொழும்பு —

ஜனாபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியுடன் கூட்டிணைவது நிலையான சமாதானத்துக்குப் பாதகமாக அமையும். அவர் ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றால், தமிழ் பேசும் மக்கள் அவர் மீது நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்படும். இவ்வாறு தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பியுடனும், பேரினவாதிகளுடனும் கூட்டிணைய முனைவது மிக மோசமான பின் விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடும். ஜே.வி.பியுடன் இணைந்து, ஆட்சியமைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விட்ட அதே தவறை, மஹிந்த ராஜபக்ஷவும் புரிவது முறையானதல்ல என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவதில் மஹிந்த ராஜபக்ஷ தீவிர முயற்சி எடுத்து வருவது குறித்து ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்ட போதே தமிழ் முஸ்லிம் கட்சித் தலைவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். (01)

# ஐ.தே.க. உறுப்பினரின் வீட்டுக்கு குண்டு வீச்சு!

அம்பாந்தோட்டை தங்கொல்லைப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேசசபை உறுப்பினர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தார்.

எனினும் வீட்டுக்கு சிறிது சேதம் ஏற்பட்ட போதும், எவரும் காயம் அடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் அமைதியையும், சபீட்சத்தையும் ஏற்படுத்த முன் பிரதமமந்திரி தனது சொந்தத் தொகுதியில் தேர்தல் வன்முறைகளை நிறுத்த முனைய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸா முன்னர் ஒரு முறை கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (01)

# நுரைச்சோலை அனல்மின் திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்த முடிவு

புத்தளம் —

புத்தளம் மாவட்டம் நுரைச்சோலையில் மக்களின் கடும் எதிர்ப்புகளை மீறி அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள நுரைச்சோலை அனல் மின் திட்டம், பாரிய எதிர்ப்புகளை சந்திக்க உள்ளது.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சீன அரசின் உதவியுடன் ஒக்ரோபர் முதல் வாரத்தில் நுரைச்சோலை அனல்மின் திட்டப் பணிகள் தொடங்கும் என்று அறிவித்திருந்தார்.

இதையடுத்து நுரைச் சோலை அனல்மின் திட்டத்தை எதிர்த்து சர்வதேச அளவிலான சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ள அந்தப் பிரதேச மக்கள் முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து புத்தளம் மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஏ.பாயிஸ் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுற்றுச் சூழலியலாளர்கள் ஏற்கனவே வழக்குத் தொடர்ந்துள்ளனர். அதைத் தொடர்ந்து சர்வதேச அளவிலான சட்டபூர்வ நடவடிக்கையையும் மேற்கொள்ள அவர்கள் திட்டமிட்டுள்ளனர். இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும், இந்தத் திட்டத்தை எதிர்க்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சி கத்தோலிக்க தேவாலயங்கள், இந்து ஆலயங்கள், புத்த பிக்குகள், மசூதிகள் ஆகியவற்றின் அனைத்து நிர்வாகிகளும் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறோம்.

இந்தத் திட்டம் தொடர்பான உடன்பாட்டில் சீன அரசுடன் தற்போது அரசு கையெழுத்திட்டுள்ளதன் மூலம், இந்தப் பிரதேச மக்களை அரசாங்கம் ஏமாற்றிவிட்டது.

நாம் மின் திட்டங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால், மின் திட்டத்துக்கான இடமாக நுரைச்சோலையைத் தேர்வு செய்ததைத்தான் நாம் எதிர்க்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை நுரைச்சோலை மின் திட்டத்தை முடக்கும் வகையிலான பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவும் அந்தப் பகுதி மக்கள் அணிதிரண்டு வருகின்றனர். அனல் மின் திட்டத்தை நுரைச்சோலையில் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து, பாரிய எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமருக்கு உருவச்சிலை அமைக்க அரசாங்கம் தீர்மானம்

படுகொலை செய்யப்பட்ட அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் உருவச்சிலை ஒன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சமாதான தேசமொன்றை உருவாக்குவதற்காக லக்ஷ்மன் கதிர்காமர் ஆற்றிய சேவையைப் பாராட்டி, கௌரவிக்கும் முகமாகவே இந்த சிலை கொழும்பில் முக்கியத்துவம் வாய்ந்த இடமொன்றில் நிறுவப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக மூன்று அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)



# 75 ஓட்டங்களால் பங்களாதேஷை இலங்கை அணி தோற்கடித்தது!



கொழும்பு —


பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 75 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற இந்தப் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தது.

இதையடுத்து இலங்கை அணி சார்பில் தரங்கவும், ஜெயசூரியவும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

அணியின் ஸ்கோர் 100ஆக இருந்தபோது ஜெயசூரியவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 45 பந்துகளில் 5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 40 ஓட்டங்களை இவர் எடுத்தார்.

அடுத்து தரங்கவுடன் டில்சான் ஜோடி சேர்ந்து ஆட்டத்தைத் தொடர்ந்தார். டில்சான் பொறுமையாக ஆடிக்கொண்டிருந்தபோது தரங்க



வேகமாக ஓட்டங்களைக் குவித்தார்.

அணியின் ஸ்கோர் 171ஐ எட்டிய போது - டில்சான் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவரையடுத்து அத்தபத்து களமிறங்கினார். அவரும் அபாரமாக அதிரடி ஆட்டத்தில் இறங்கினார்.

இதற்கிடையில் ஸ்கோர் 194ஆக இருந்தபோது - தரங்க ஆட்டமிழந்தார். இவர் 110 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 105 ஓட்டங்களை எடுத்தார்.

இவரையடுத்து அத்தபத்துவுடன் சங்கஹார ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடி ஆட்டத்தில் இறங்கினர். இதனால் ஸ்கோர் வேகமாக உயர்ந்து 245 ஓட்டங்களை எட்டியபோது - சங்கஹார 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 24 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்துவந்த டில்ஹார 2 ஓட்டங்

விளையாட்டு

களுடன் ஆட்டமிழந்தார். இதையடுத்து ஜெயவர்த்தன களமிறங்கினார். அத்தபத்துவும், ஜெயவர்த்தனவும் வேகமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

50 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 295 ஓட்டங்களைக் குவித்தது. அத்தபத்து 43 பந்துகளில் 53 ஓட்டங்களையும், ஜெயவர்த்தன 18 பந்து



களில் 23 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ரபீக் 2, ரசல், ஹுசேன், இஸ்லாம் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

அடுத்து கடினமான இலக்குடன் பங்களாதேஷ் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. பங்களாதேஷ் அணி வீரர்கள் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்காதபோதும் - நிதானமாக ஆடினர்.

ஸ்கோர் 38ஆக இருந்தபோது - ஜாவிட் ஓமர் 18 ஓட்டங்களுடனும், ஸ்கோர் 77ஆக இருந்தபோது அப்ரப் அகமத் 18 ஓட்டங்களுடனும், ஸ்கோர் 122ஆக இருந்தபோது நபீஸ் 51 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து அஷ்ரபுல் 31, மொகமட் ரபீக் 9, துஷார் இம்ரான் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

50 ஓவர்கள் முடிவில் பங்களாதேஷ் அணி 6 விக்கெட் இழப்புக்கு 220 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 75 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

ஹபிபுல் பசார் 47 பந்துகளில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 41 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும், காலித் மசூத் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

டில்ஷான் 3, வாஸ், டில்ஹார, முரளிதரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

## உதைபந்தாட்ட போட்டியில் இன்று!

வடமராட்சி —

ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியின் அனுசரணையுடனும், நமது ஈழநாடு பத்திரிகையின் ஊடக அனுசரணையுடனும், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி டயமன்ஸ் மைதானத்தில் நடைபெறுகின்றது.

இன்றைய ஆட்டமாக மாலை 4 மணிக்கு டயமன்ஸ் அணியை எதிர்த்து கருணாகரன் அணியும், 5 மணிக்கு மனோகரா அணியை எதிர்த்து யங்லயன்ஸ் அணியும் மோதவுள்ளன. (12)

## றோட்டறிக் கழக கிரிக்கெட்

## தேசிய சேமிப்பு வங்கி அணி அரையிறுதியாட்டத்துக்கு தகுதி

சுன்னாகம் றோட்டறிக் கழகம் யாழ்.மாவட்டத்தில் உள்ள வங்கிகளுக்கிடையில் 15 ஓவர்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியை நடத்தி வருகின்றது. யாழ். மாவட்டத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கி, கொமர்ஷல் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, செலான் வங்கி, இலங்கை வங்கி போன்ற முன்னணி வங்கிகள் இதில் பங்குபற்றுகின்றன.

இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் தேசிய சேமிப்பு வங்கியும், இலங்கை வங்கியும் மோதின. இதில் தேசிய சேமிப்பு வங்கி 72 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தெரிவானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தேசிய சேமிப்பு வங்கி 5 விக்கெட் இழப்புக்கு 101 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதன் 46, அருளானந்தம் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை வங்கி சார்பில் சிவவேலழகன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை வங்கி 29 ஓட்டங்களுடன் சுருண்டது. இதில் சிவவேலழகன் 8 ஓட்டங்களை அதிகூடிய ஓட்டமாகப் பெற்றார். தேசிய சேமிப்பு வங்கி சார்பாக மேனன், ராஜரூபன், பிரதீபன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (72)

## ஜனசக்தி சுழல்கிண்ண உதைபந்தாட்டம்; மனோகரா, டயமன்ஸ் அணிகள் வெற்றி!



மனோகரா அணியின் சசிகாந்

வடமராட்சி —

நமது ஈழநாடு ஊடக அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கடந்த 27ஆம் திகதி வதிரி டயமன்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் முதல் ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து ஜீவகன் அணி மோதியது.

23ஆவது நிமிடத்தில் இருகோல்களைப் போட்டு மனோகராஅணியினர் மிகச் சிறப்பாக ஆடினர். இதில் முதல் கோலை அந்த அணியைச் சேர்ந்த சசிகாந் தட்டிக்கொடுக்க, அதனை நிரோஜன் மிக அழகாக கோலாக்கினார்.

அடுத்து சசிகாந் - தான் தனியே பந்தைக் கொண்டுசென்று கோலைப் போட்டார். இதனால், இடைவேளையின் முன்னர் 2:0 என்ற கோல் கணக்கில் மனோகரா அணியினர் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது 7ஆவது, 8ஆவது, 9ஆவது, 15ஆவது, 16ஆவது நிமிடங்களில் மனோகரா அணியினர் ஐந்து கோல்களைத் தொடர்ச்சியாகப் போட்டனர். முதல்கோலை கருணானந்தன் அடித்ததுடன், அடுத்த கோலை பாலகரன் தட்டிக்கொடுக்க சசிகாந் தலையால் இடித்துக் கோலாக்கினார்.

அடுத்து 9, 15ஆவது நிமிடங்களில் கிரிதரன் இரண்டு கோல்களைப் போட்டார். அதைத் தொடர்ந்து 16ஆவது நிமிடத்தில் சசிகாந் மேலும் ஒரு கோலைப் போட்டார். இதனால்,



டயமன்ஸ் அணியின் பிறேம்குமார்

ஜீவகன் அணி நிலைகுலைந்தது. இதனால் மனோகரா அணி ஜீவகன் அணியை 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

அடுத்த ஆட்டமாக டயமன்ஸ் அணியை எதிர்த்து வல்வை அணி மோதியது. முதற்சுற்றில் இரு அணிகளும் மோதியது பார்வையாளர்களுக்கு இறுதியாட்டம்போல் காட்சியளித்தது. இதில் ஆட்டம் தொடர்ந்தபோது 11ஆவது நிமிடத்தில் வல்வை அணியைச் சேர்ந்த சண்முகதாஸ், டயமன்ஸ் அணியின் கோல் காப்பாளரையும் தாண்டி மிகச் சிறப்பான கோல் ஒன்றைப் போட்டார்.

அடுத்த 12ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியினர் தமக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டனர். இதனால் இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் வல்வை அணியினர் முன்னிலை வகித்தனர்.


இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது முதலாவது நிமிடத்திலேயே வல்வை அணியினர் தமக்குக் கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டனர். இதனால் 4ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியினர் இரு கோல்களைப் போட்டு வல்வை அணியினரை அதிர்ச்சிக்குள்ளாக்கினர்.

இதில் முதல்கோலை அரவிந்தனும், அடுத்த கோலை பிறேம்குமாரும் அடித்தனர்.

10ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர்கள் தினேஷாலும், 22ஆவது நிமிடத்தில் பிரகாஸாலும் ஒவ்வொரு கோல் போடப்பட்டது. இதனால் டயமன்ஸ் அணி, வல்வை அணியை 5:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெற்றது. இதில் இறுதிவரை வல்வை விளையாட்டுக் கழகம் சளைக்காமல் விளையாடியமை பார்வையாளர்களால் பாராட்டப்பட்டது.

இந்த இரு போட்டிகளிலும் ஆட்டநாயகர்களாக மனோகரா அணியைச் சேர்ந்த ச.சசிகாந், டயமன்ஸ் அணியைச் சேர்ந்த பிறேம்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (12)

# 27 ஓட்டங்களால் சிம்பாப்வேயை நியூஸிலாந்து அணி தோற்கடித்தது!



ஹராரே —

நியூஸிலாந்தில் நடைபெற்று வரும் வீடியோகோன் கிண்ண முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் ஹராரேயில் நடைபெற்ற நியூஸிலாந்து - சிம்பாவே அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டத்தில் நியூஸிலாந்து 27 ஓட்டங்களால் சிம்பாப்வேயை தோற்கடித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக வின்சென்டும் பிளெமிங்கும் களம் புகுந்தனர். தொடக்கமே அந்த அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

சிம்பாப்வேக்கு எதிரான முதல் ஆட்டத்தில் 172 ஓட்டங்களைக் குவித்த வின்சென்ட் முதல் ஓவரின் 3 ஆவது பந்திலேயே ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். வின்சென்டைத் தொடர்ந்து அஸ்ரில், பிளெமிங்குடன் இணைந்தார்.

ஸ்கோர் 7 ஓவரின் முடிவில் 39 ஆக உயர்ந்த நிலையில் 23 ஓட்டங்களை (25 பந்துகளில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) எடுத்திருந்த கப்டன் பிளெமிங் ஆட்டமிழந்தார். பின்னர் மக்மிலன் 5 ஓட்டங்களிலும், மார்ஷல் 7 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட் டமிழந்தனர்.

5 ஆவது விக்கெட்டுக்கு அஸ்ரிலுடன் ஸ்ரைரிஸ் இணைந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்று ஆடி ஓரளவுக்கு ஓட்டங்களைச் சேர்த்தது. இதனால் 19.3 ஓவரில் அந்த அணி 100 ஓட்டங்களைத் தொட்டது.

சிறப்பாக ஆடிய அஸ்ரில் அரைச் சதத்தைப் பூர்த்திசெய்தார். 54 பந்துகளைச் சந்தித்த அவர் 9 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். அவர் 61 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களம்புகுந்த ஓரம் 5 ஓட்டங்களிலும், மக்கலம் 2



ஓட்டங்களிலும் ரன் அவுட்டாகினர்.

9 ஆவது வீரராக களமிறங்கிய விற்ரோறி அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார். அவர் 47 பந்துகளைச் சந்தித்து 3 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். மறு முனையில் நிலைத்து நின்று ஆடிக்கொண்டிருந்த ஸ்ரைரிஸ் 63 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

நியூஸிலாந்து அணி 49.1 ஓவர்களில் 238 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சிம்பாப்வே தரப்பில் பிளிங்நெட் 4 விக்கெட்டுக்களையும், ஈவிங் 3 விக்கெட்டுக்களையும், அயர்லான்ட் 2 விக்கெட்டுக்களையும், ஸ்ரீக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 239 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய சிம்பாப்வே அணி நியூஸிலாந்து அணியினரின் சிறப்பான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டைப் பறிகொடுத்தது.

இதனால் சிம்பாப்வே அணி 49 ஓவர்களில் 211 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றது. இந்தத் தொடரில் நியூஸிலாந்து பெற்ற 3ஆவது வெற்றி இதுவாகும்.

அதிகபட்சமாக பிளிங்நெட் 50, (47 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்), கவெண்ட்ரி 35, கார்ஸ்லே 30 ஓட்டங்களை எடுத்தனர். நியூஸிலாந்து தரப்பில் ஷேன் பொண்ட் 4, மில்ஸ், விற்றோரி ஆகியோர் தலா 2, பட்டேல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன், 50 ஓட்டங்களைக் குவித்த சிம்பாப்வே வீரர் பிளிங்நெட்டுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

# மாய மோதிரம்








## துருவன்

### மரங்கள் செடிகள் கொடிகள்

மரங்கள் செடிகள் கொடிகள்
மனிதனுக்கு எத்தனை பயன்கள்!
மரங்களை வளர்ப்பதனாலே
மழைதனைப் பெற வழி யாகுமே!

ஆலமரத்தின் அடியில்
அடடா நிழல்தரும் குளிர்ச்சி!
ஆல மரத்தில் கூடு
அதுதான் பறவைக்கு வீடு!

மரத்தின் இலை, வேர் மருந்தாய்
மனிதனின் நோய்களைப் போக்கும்!
மரத்திலை வேர்கள் நமக்கு
வாசனைப் பொருளாய் மாறும்!

சுற்றிலும் ஆலையின் புகையால்
தூசு படிந்த காற்று!
சுற்றிடும் மாசுக் காற்றைத்
தூய்மைப் படுத்திடும் மரங்கள்!

## நல்லதையே நினை

முருகன் மிகவும் குழப்படி காரனாக இருந்தான். ஆசிரியர் அன்புடன் எடுத்துரைத்த அறிவுரைகள் எதுவும் அவன் செவியில் ஏறவில்லை. அவனைத் திருத்த என்ன செய்வதென ஆசிரியர் யோசித்தார். நல்ல வழி தோன்றியது.

அவனை அழைத்து, 'முருகா நம் ஊரை அடுத்துள்ள மலைப்பகுதியில் உன்னைப்போல் ஒரு சிறுவன் இருக்கிறான். அவனைக் கண்டுபிடிப்பது சிரமம். நீ உன் திறமையைப் பயன்படுத்தி அவனை நம் ஊருக்கு அழைத்து வா என்றார் ஆசிரியர்.

மலைப்பகுதியில் போய் எப்படா அந்தச் சிறுவனைக் கண்டுபிடிப்பது என்று யோசித்த முருகன் 'டேய்' என்று கத்தினான். உடனே எதிர்ப்புறமிருந்து 'டேய்' என்ற குரல் வந்தது. இதைக் கேட்ட முருகனுக்கு வழக்கம்போல் கோபம் வந்தது. அந்தச் சிறுவன் என்னை மரியாதை இல்லாமல் கதைக்கிறான் என்று துடித்தான்.

மீண்டும் முருகன், 'உனக்கு வீரமிருந்தால் என்னெதிரே வாடா' என்று கத்தினான். அவன் என்ன சொன்னானோ அதுவே அவன் காதுக்கும் கேட்டது.

குரல் கொடுக்கிற அந்தக் குறும்புச் சிறுவனை எப்படியும் கண்டுபிடித்து உதைக்க வேண்டும் என நினைத்துக் கொண்டே ஊருக்குத் திரும்பினான் முருகன்.

தனது ஆசிரியரிடம் சென்றான் 'அந்தச் சிறுவன் என்னை ஏசுகிறான். நான் எவ்வளவோ முயற்சி செய்தும் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை' - என்றான்.

உடனே ஆசிரியர், 'முருகா அந்தச் சிறுவன் மிகவும் நல்லவன், நீதான் அவனைப் புண்படுத்தியிருப்பாய். நாளை நானும் உன்னோடு அங்கு வருகிறேன். அவனிடம் நீ இனிமையாகக் கதை. பிறகு நடப்பதைப் பார்' - என்றார்.

மறுநாள் முருகனும், ஆசிரியரும் மலைப்பகுதிக்கு வந்தனர். முருகன் உரத்த குரலில், 'நீ நல்ல சிறுவன் என்று என் ஆசிரியர் சொன்னார். நான் நேற்று உன் மனம் புண்பட நடந்துகொண்டதற்காக வருந்துகிறேன்' என்று கத்தினான்.


அவன் என்ன சொன்னானோ அதே தொடர் மீண்டும் கேட்டது. 'நாம் இருவரும் இனி நண்பர்களாக இருப்போம். வா மகிழ்ச்சியாக ஓடிவிளையாடுவோம்' என மீண்டும் குரல் கொடுத்தான் முருகன். அவன் சொன்னதே மீண்டும் கேட்டது. மகிழ்ச்சியடைந்தான் முருகன்.

உடனே ஆசிரியர் முருகனிடம், 'நான் சொன்னதுபோல் இங்கு எந்தச் சிறுவனும் கிடையாது. இந்தப் பகுதியில் நாம் என்ன கதைக்கிறோமோ அது அப்படியே எதிரொலிக்கும். அதற்கு 'எதிரொலி' என்று பெயர். நீ தீயசொற்களை நேற்றுக் கதைத்தாய். அவை அப்படியே எதிரொலித்தது. உன்னைத் துன்பப்படுத்தியது.

இன்று இனிய சொற்களைக் கதைத்தாய். உனக்கு மகிழ்ச்சி கிடைத்துள்ளது. நாம் பிறருக்குத் துன்பம் விளைவித்தால் நமக்கும் துன்பம்தான் கிடைக்கும்' என்றார் ஆசிரியர்.

'சேர் எனக்குப் புத்தி தெளிந்துவிட்டது. இனி எப்போதும் பிறர் மனம் புண்படக் கதைக்கமாட்டேன்' என்றான் முருகன்.

தொகுப்பு : சி.யாழினி,
தரம் - 07
யா/மா.சென்.யோ.ம.வி.



நே.தனுசியா,
தரம் - 07,
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை.



ந.சஞ்ஜீவன்,
தரம் - 07,
யா/விக்னேஸ்வராக் கல்லூரி.

# பொது அறிவு

1. எகிப்து நாட்டின் முதல் அதிபர் யார்?
   நாசர்.
2. இலங்கையில் உயர் நீதிமன்றம் நிறுவப்பட்ட ஆண்டு எது?
   1801 ஆம் ஆண்டு.
3. இலங்கை அரசியல் திட்டத்தை வரைந்தவர் யார்?
   சேர் ஐவர் ஜென்னிங்ஸ்.
4. நவீன நோய்களின் எதிர்ப்புத்துறைத் தந்தை என்று அழைக்கப் படுபவர் யார்?
   பால் எவற்றலிக்.

பா.யோ.எஃசான்,
புனித ஹென்றியரசர் கல்லூரி.

---

1. எதிரொலியைப் பயன்படுத்தி அமைத்த கருவி எது?
   ஆழமறி கருவி.
2. 1000 பொய்கைகளின் நாடு எது?
   பின்லாந்து.
3. பாரமற்ற உலோகம் எது?
   அலுமினியம்.
4. புல் வீடு எது?
   காவாய்.
5. உலகத்தின் கூரை எது?
   திபெத்.

ப.மதிவதனி,
தரம் 08,
யா/மகாஜனக் கல்லூரி.

# சிரியுங்கள்...

ஒரு அழகான கிளி. அதற்கு எப்படிக் கதைப்பது என்று பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்தார் அதை வளர்ப்பவர். கொஞ் சநாளில் நன்றாகக் கதைக்க ஆரம்பித்தது கிளி.

ஒருநாள் தன் நண்பரிடம் பெருமையாகக் கிளியின் பேச்சுத் திறமையைப்பற்றிச் சொன்னார். கிளியின் பேச்சை நண்பரும் கேட்க விரும்பினார்.



வளர்ப்பவர் : நான் கதைப்பேன்.
கிளி : நான் கதைப்பேன்.
வளர்ப்பவர் : நான் சிரிப்பேன்.
கிளி : நான் சிரிப்பேன்.
வளர்ப்பவர் : நான் சாப்பிடுவேன்.
கிளி : நான் சாப்பிடுவேன்.
வளர்ப்பவர் : நான் பறப்பேன்.
கிளி : ஏன் பொய் சொல்லுறீங்கள்! உங்களால் பறக்கமுடியாதே.

நண்பரும், வளர்ப்பவரும் வாயடைத்துப் போனார்கள்.






# நரிக்கு வந்த ஆசை

கொஞ்ச நாட்களாகத்தான்அந்தக் கரடிக்கும், காண்டாமிருகத்துக்கும் நட்பு. மரம் ஒன்றில் இருந்த தேனை மோப்பம் பிடித்து வந்தபோது தான் எதிர்ப்பட்டது அந்தக் குட்டிக் காண்டாமிருகம்.

கரடி, எந்தவித தயக்கமும் இல்லாமல் காண்டாமிருகத்திடம் கதைத்தது. 'தம்பி... இதற்குமுன் நான் உன்னை இந்தப் பக்கம் பார்த்ததில்லையே...?

கரடி இப்படிக் கேட்டதும், காண்டாமிருகம் தயக்கம் நீங்கி பதில் சொன்னது, 'இலை, தழை, செடி, கொடிகள்தான் இதுவரை எங்கள் உணவு.'

'தெரியும் தம்பி...'



'எனக்கும் தேன் சாப்பிட ஆசை. அது நல்ல இனிப்பாக இருக்குமாமே...?

'யார் சொன்னது...?'

'என் நண்பர்கள்தான்'

'தேன் இனிப்புத்தான். அது எட்டாத உயரத்தில் அல்லவா இருக்கிறது...!'

'அது எனக்கும் தெரியும். என்னால் மரமெல்லாம் ஏறமுடியாது. அதேநேரம் உங்களால் மரத்தில் ஏறித் தேனெடுக்க முடியும் என்பது எனக்குத் தெரியும்'

'இதை யார் சொன்னது...?'

'நண்பர்கள்தான்.'

'நான் தேனெடுக்க மரம் ஏறினால் முழுத் தேனையும் குடித்துவிட்டுத்தான் கீழே இறங்குவேன்'

'எப்போதும் அப்பிடிச் செய்யமுடியாதே...'

'என்ன சொல்கிறாய்...?'

'நண்பர்களுக்கென்று சில விடயங்களை விட்டுக்கொடுக்கத்தான் வேண்டிவரும்.'

'உண்மைதான். ஆனால் யார் நண்பன்...?'

'ஏன் நானாக இருக்கக்கூடாதா...?'

'இப்போதுதான் நாம் சந்திக்கவே ஆரம்பித்திருக்கின்றோம்.'

'நல்ல நட்பு ஆரம்பிக்க நாட்கணக்குத் தேவையில்லையே...'

'புத்திசாலித்தனமாகக் கதைக்கிறாய்...'

'உங்களைக் கவர்ந்துவிட்டதிலேயே நட்புக்குரியவனாகிவிட்டதை உணர்ந்துகொண்டேன்.'

'உனக்குத் தேன் கிடைக்கும். அதுவும் இப்போதே வா என்னோடு...'

காண்டாமிருகக்குட்டி கரடியுடன் போனது.

நடந்த இந்த உரையாடலை புதர் மறைவில் நின்றபடி கவனித்துக்கொண்டிருந்தது, ஒரு நரி.

நரி இப்போது ஒரு முடிவுக்கு வந்திருந்தது காண்டாமிருகத்துக்கு எப்படித் தேன் மீது ஆசை ஏற்பட்டதோ, அதேமாதிரி நரிக்கு அந்தக் காண்டாமிருகத்தின் இறைச்சி மீது ஆசை ஏற்பட்டது.

அதேநேரம் காண்டாமிருகம் தன் மீது தடுக்கி விழுந்தால்கூட எலும்பு நொறுங்கிப்போகலாம் என்பதும் நரிக்குத் தெரிந்தே இருந்தது

ஆனாலும் ஆசை உட்புகுந்துவிட்டால் அதை நிறைவேற்ற மனம் குறுக்கு வழியில் யோசித்துக்கொண்டுதானிருக்கும்.

நரியும் தனக்கேயுரிய அந்தக் குறுக்கு வழியில் யோசித்ததில் ஒரு வழி புலப்பட்டது.

தினமும் அலைந்துதிரிந்து காண்டாமிருகம் எங்கெங்கே போகிறது என உளவு பார்த்தது நரி. ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள புல்வெளிக்கு மட்டும் தினமும் காண்டாமிருகம் வருகிறது என்பது அப்போது தெரிய வர, அந்த இடத்தில் நாலடிக்குக் குறையாமல் ஒரு குழிதோண்டியது குழியின்மேல் இலைகளைப் பரப்பி மண் போட்டு மூடி வைத்தது.

அன்றைக்குப் பார்த்து காண்டாமிருகக் குட்டிக்கு கரடி தேன் தருவதாகச் சொன்ன நாள். அதனால் மிகுந்த எதிர்பார்ப்போடு காண்டாமிருகம் கரடியை எதிர்பார்த்துக் காத்திருந்தது. கரடி வருவது தாமதமாகிக் கொண்டே போக...

'சரி... என்ன வேலையோ... இருந்துவிட்டுப் போகட்டும் நாம் போவோம்' என்று காண்டாமிருகம் நடக்க ஆரம்பித்தது. நரி எதிர் பார்த்துக் காத்திருக்கும் அந்தப் பாதையில்,

இன்னும் நாலடி எடுத்து வைத்தால் காண்டாமிருகம் பள்ளத்தில் விழுந்துவிடும். அதற்குள் நடந்தது அந்தச் சம்பவம். 'தொப்பென்ற காது பிளக்கும் சத்தம். அப்புறமாய் அந்தச் சத்தத்துக்குரிய பொருள் உருண்டு அந்தப் பாதைக்கு வந்தது, வந்த வேகத்தில் காணாமல் போனது. அப்போதுதான் பனை மரத்தில் இருந்து விழுந்த பனம்பழம் ஒன்று உருண்ட வேகத்தில் அந்தப் பொய்ப்பந்தலை அடைந்து பாரம் தாங்காமல் பள்ளத்திலேயே விழுந்தது தெரியவந்தது.

'அடடா... யாருக்கோ பள்ளம் தோண்டி இருக்கிறார்கள்,' புரிந்து கொண்டு அதிர்ந்த காண்டாமிருகம் சுற்றுமுற்றும் பார்த்த நேரத்தில் தான் சரேலெனப் புதருக்குள் பாய்ந்து மறைந்த நரி அதன் கண்ணில் பட்டது.



சற்றுத் தூரத்தில் அப்போதுதான் வந்து கொண்டிருந்த கரடியிடம் ஓடிப்போய் விடயத்தைச் சொன்னது காண்டாமிருகம்.

கரடி வேகமாக நரி ஒளிந்திருந்த புதரை நெருங்கி, அங்கு பதுங்கியிருந்த நரியை தலைக்கு மேலே தூக்கிக்கொண்டு வந்தது.

'என்னை மன்னித்துவிடுங்கள்... இதுபோல் நடந்துகொள்ளமாட்டேன்' என்று வலியில் புலம்பியது நரி.

'நண்பரே... போகிறான் விட்டுத் தள்ளுங்கள்...' என்று காண்டாமிருகம் சொல்ல -

'அவன் உன்னைப் பிடித்து இரையாக்க பள்ளம் தோண்டியிருக்கிறான். அவனுக்கா இரக்கம்...?

கரடி இப்படிக் கேட்க. காண்டாமிருகமோ, 'ஒருதடவை விட்டுத்தான் பாருங்களேன், திருந்தலாம் இல்லையா...?' என்றது.

'திருந்துவானா... இவனா... தந்திரத்திலேயே சகலதும் பண்ணத் தெரிந்த இவனா திருந்துவான்... நல்ல ஆளப்பா நீ...' சொல்லியபடியே நரியை மறுபடியும் தலைக்கு மேலாகச் சுற்றித் தூக்கி எறிந்தது கரடி

## விடுகதைகளும், விடைகளும்

1. அவனுக்குத் தழுவவும் தெரியும், நழுவவும் தெரியும். – அது என்ன?
2. ஆள் இறங்காத கிணற்றிலே மரம் இறங்கிக் கூத்தாடுது. – அது என்ன?
3. ஆயிரம் ஆயிரம் முடிச்சுகளும் என்னிடம் உண்டு. ஆயிரம் ஆயிரம் ஓட்டைகளும் என்னிடம் உண்டு. – நான் யார்?
4. இந்த ஊரிலே அடிபட்டவன், அடுத்த ஊரிலே போய்ச் சொல்வான். – அவன் யார்?
5. ஓட்டுக்குள்ளே வீடு, வீட்டுக்குள்ளே கூடு. – அது என்ன?

விடைகள்

1. காற்று.
2. அகப்பை.
3. வலை.
4. தந்தி.
5. நத்தை.

### 1. தீர்வு காணுங்கள்.

அமலன், விமலன் இருவரும் நண்பர்கள். இருவரிடமும் பணம் இருந்தது. அப்போது விமலனிடம் அமலன் சொன்னான், 'எனக்கு ஒரு




ரூபா கொடு. நீ வைத்திருக்கும் அளவுக்குப் பணம் தருகிறேன்!'


உடனே விமலன் சொன்னான், 'இல்லை, நீ என்னிடம் ஒரு ரூபா கொடு. நீ வைத்திருப்பதைப் போல இரண்டு மடங்கு பணம் உனக்கு நான் தருகிறேன்.'

சரி. அமலனும், விமலனும் ஆளுக்கு எவ்வளவு பணம் வைத்திருந்தார்கள்.

இங்குள்ள தீக்குச்சிகளுள் மூன்றை மட்டும் நகர்த்தி, ஐந்து சதுரங்கள் மட்டும் உருவாக்க வேண்டும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.



### தவறைக் கண்டுபிடியுங்கள்.



சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கும் இந்தக் காட்சியில் ஒரு தவறு உள்ளது. அதைக் கண்டுபிடியுங்கள்.

### விடைகள்.

1. அமலன் 5 ரூபாவும், விமலன் 7 ரூபாவும் வைத்திருந்தனர்.

2. துடுப்பாடுபவர் அவுட் ஆனால் கிரிக்கெட்டில் அம்பயர் ஒரு விரலைக் காட்டுவதுதான் வழக்கம். ஆனால் அவர் இரண்டு விரலை அல்லவா காட்டுகிறார்.





## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................... ....................
திகதி ஒப்பம்


.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# எத்தனை கொடிகள்?



# யார்? என்ன விளையாடுகிறார்கள்?

**1 இலிருந்து 84 வரையான புள்ளிகளை இணைத்துக் கண்டுபிடியுங்கள்.**



**இரண்டு படங்களுக்கிடையிலும் ஐந்து வித்தியாசங்கள் உண்டு. அவற்றை அடையாளம் காண்பதற்கு முயற்சியுங்கள்.**





# பூவா அல்லது ஓநாய் வாயா?

வினோதனும், கோகுலனும் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தனர்.

வினோதன் மகிழ்ச்சியாக இருந்தான். இன்று அனிதா ஆசிரியை அவனை மூன்றுதரம் கேள்வி கேட்டார்.

அவனுக்கு நல்ல புள்ளிகள் கிடைத்திருந்தது.

கோகுலன் சோகமாக சிந்தனை வயப்பட்டிருந்தான். அவனை இரண்டு தடவைகள் கரும்பலகைக்கு அருகில் கூப்பிட்டு, அனிதா ஆசிரியை கேள்விகள் கேட்டார். கோகுலனால் சரியான பதில் சொல்ல முடியாததால், ஆசிரியை குறைவான புள்ளிகள்தான் போட்டார். அதோடு அவர் சொன்னார்;

'அம்மாவைப் பார்த்தால், உன்னுடைய குறைவான புள்ளிகள் பற்றிச் சொல்லப்போகிறேன்'.

அது வெதுவெதுப்பான வசந்தகாலத்தில் ஒருநாள் சூரியன் பிரகாசித்தது. நீலநிற வானத்தில் வெண்ணிற மேகங்கள் மிதந்துகொண்டிருந்தன.

'கோகுலன், வானத்தைப் பாரேன்! எவ்வளவு அழகிய மேகம். அது வெண்ணற ரோஜாவைப் போலிருந்தது. பார், மென்மையான, மெல்லிய இதழ்கள் விரிகின்றன. காற்றில் இதோ அசைகின்றன'

கோகுலன் நீண்டநேரம் வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். பின் மெதுமெதுவாக முணுமுணுப்போடு சொன்னான்.

'எங்கே இதழ்கள்? எங்கே பூ? வானம் ஒரு ஓநாயைப் போலுள்ளது. அதோ பார் - அந்தப் பக்கம் தலை. அது யார் மீதோ பாயத் தயாராக தனது கொடூர வாயைத் திறந்து கொண்டு நிற்கிறது.'



சிறுவர்கள் இருவரும் நீண்டநேரம் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவருக்கும், அவர்களுடைய மனநிலைக்கேற்ப ஒவ்வொருவிதமாகப் பட்டது.

# உயர... உயர...



பலூனில் மிக உயரத்தில் பறந்தவர் என்ற சாதனைக்குரியவர்கள் இங்கிலாந்து நாட்டின் ஹென்றி காக்ஸ்வெல், ஜேம்ஸ் கிலைஷர் ஆவார்கள்.

இவர்கள், இருவரும் 1862 ஆம் ஆண்டு 10 ஆயிரம் மீற்றர் (10 கிலோ மீற்றர்) உயரத்துக்கு பலூனில் பறந்து சென்றனர். இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், 8 ஆயிரம் அடி உயரத்துக்கு மேலே போகப் போக ஒக்சிஜன் குறைவாகவே இருக்கும்.

இதைச் சுவாசித்து உயிர்வாழ்வது கடினம். ஆனால், ஹென்றி காக்ஸ்வெல், ஜேம்ஸ் கிலைஷர் இருவருமே ஒக்சிஜன் உபகரணங்கள் எதுவும் இல்லாமலே உயரப் பறந்துசென்று பூமிக்குத் திரும்பினார்கள்.

# நண்டு பார்வை

நண்டுகளின் பார்வைச் சக்தி கடலின் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக இருக்கின்றன. மிகவும் அடர்த்தி



யான, அசுத்தமான கடல் நீரில்கூட அவைகளால் தெளிவாகப் பார்க்கமுடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

எவ்வளவு ஆழமான பகுதியில் கடல் நண்டுகள் இருந்தாலும் அவற்றின் கண் பார்வைத்திறன் குறையாது. மேலும் பச்சோந்திகள் இடத்துக்கிடம் தகுந்தவாறு நிறம் மாறிக் கொள்வதுபோல நண்டுகளின் கண்கள் இடத்துக்கு ஏற்ற மாதிரி பார்வைத் திறனை அமைத்துக்கொள்கின்றனவாம்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்

திருவள்ளுவர்

## நமது நோக்கு

# பேரினவாத கட்சிகளின் கூட்டு... சமாதானத்துக்கு எதிரான வேட்டு...!

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் முடிவுக்கு ஜே.வி.பியினர் வந்துவிட்டதாக திரைமறைவுப் பேச்சுக்களில் கலந்துகொண்ட ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே தேசப்பற்றுள்ள சத்திகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது என மகிந்த ராஜபக்ஷ விடுத்த அறைகூவலுக்கு - ஜே.வி.பியினரிடமிருந்து கிடைத்த பதிலில் தாங்கள் முன்வைக்கும் கொள்கைத் திட்டத்துக்கு சம்மதித்துத் தங்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் தனியாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நியமிக்கும் தங்களது யோசனைகளை கைவிட்டு பிரதமர் ராஜபக்ஷவை ஆதரிக்க தாம் தயார் என குறிப்பிட்டிருந்தது நினைவிருக்கலாம்.

தேசிய விவகாரங்கள் தொடர்பாகவும், அவற்றை எவ்வாறு கையாளவேண்டுமென்பது குறித்தும் ஜே.வி.பியினர் ஒரு தீர்க்கமான கொள்கைத் திட்டத்தை தயாரித்துவைத்துள்ளதாகவும், அதனை பௌத்த சிங்கள மக்களது பொதுக் கொள்கைப் பிரகடனமாக மக்கள்முன் வைக்கப்போவதாகவும், அதனை ஆதரிப்பவர்கள் மட்டுமே தேசப்பற்றுள்ளவர்கள் எனவும், ஜே.வி.பியினர் கடந்த சிலவாரங்களாக பொது மேடைகளில் பகிரங்கமாகப் பேசிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டதையடுத்து ஜே.வி.பியின் ஆதரவைப் பெறாது தேர்தலில் தான் வெற்றிபெற முடியாது என உறுதியாக நம்பிய ராஜபக்ஷ, தனக்கு மிகவும் நெருக்கமான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராச்சி போன்ற சிறிலங்கா சுகந்திரக் கட்சிப் பிரமுகர்கள் ஊடாக ஜே.வி.பியின் தலைவர்களுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபின்னர் அவர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகள் பலவற்றை ஏற்றுக்கொள்ள பிரதமர் ராஜபக்ஷ சம்மதித்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜே.வி.பியினரின் எந்தெந்த நிபந்தனைகளுக்குச் சம்மதம் தெரிவித்துள்ளார் என்ற விடயம இன்னமும் விபரமாக வெளிவராவிட்டாலும் - குறிப்பாக சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பான தமது நிபந்தனைகளை அவர் ஏற்றுக்கொண்டதையடுத்தே அவரை ஆதரிக்க முடிவெடுத்திருப்பார்கள் என்பது மட்டும் தெளிவானதாகும்.

ஜே.வி.பியினரின் தேசிய கொள்கைகள் என்று கூறப்படுவனவற்றுள் - சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் அனுசரணையாளர் பங்களிப்பு, விடுதலைப் புலிகளுடனான பொதுக கட்டமைப்பு தொடர்பான உடன்பாடு போன்ற பிரச்சினைகள் தொடர்பான நிலைப்பாடு முக்கியமானவையாக இருக்கும் என்றே கூறவேண்டும்.

ஜே.வ.பியினர் நோர்வே அனுசரணையுடனான சமாதான முன்னெடுப்புகளை வெளிப்படையாகவே எதிர்க்கின்றனர்.

சுனாமி அனர்த்தத்துக்குப் பின்னரான நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவ பொதுக்கட்டமைப்பை அவர்கள் நிராகரிப்பதுடன், அதுகுறித்த அரசு - புலிகள் உடன்பாட்டையும் எதிர்க்கின்றனர்.

புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாடு மீளாய்வு செய்யப்படவேண்டும் என வலியுறுத்துவதுடன், புதிதாக பேச்சுக்களை இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளின் அனுசரணையுடன தொடங்கவேண்டுமெனவும் ஜே.வி.பி. வலியுறுத்த வருவதும் தெரிந்ததே.

இந்த நிபந்தனைகள் ஜே.வி.பி விதித்த முக்கியமான நிபநதனைகள் என்றால் இதனையும் விடவும் வேறு நிபந்தனைகளையும் அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள் என்றே அர்த்தமாகும்.

அந்த நிபந்தனைகள் யாவும் அவர்களின் சுயநல அரசியல அபிலாஷைகளின் அடிப்படையிலான பேரமாகவே கருதமுடியும். அதுகுறித்து நாம் அக்கறைகொள்ளவேண்டியதில்லை.

ஆனால், சமாதானப்பேச்சு, பொதுக்கட்டமைப்புத் தொடாபான ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கும் முடிவில் ராஜபக்ஷ அவர்கள் இருப்பாரேயானால்- அவர் விடுதலைப் புலிகளுடன் பேசி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதே தனது நிலைப்பாடு எனப் பேசுவது வெறும் 'பம்மாத்து' செயற்பாடாகவே இருக்கும்.

அதேபோன்று ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக சமாதான முயற்சிகளை அரசு கைவிடாது என்று அமைச்சர் மங்கள சமரவீர வாய்ப்பநதல் போடுவது - தமிழ்மக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் தந்திரோபாயமேயாகும்.

மகிநத ராஜபக்ஷ அவர்களுக்கான பேரினவாத கட்சிகள் மற்றும் அமைப்புக்களின் ஆதரவானது - அவரின் தமிழ் மக்களுக்கும், அமைதி முயற்சிகளுக்கும், பொதுக்கட்டமைப்புக்கும் எதிரான கொள்ளைகளின் அடிப்படையில்தான் வழஙகப்படும் என்பதை அரசியல் யதார்த்தம் அறிந்தோர் அறிவர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி- ஹெல உறுமயவின் ஆதரவைக்கோரி பேச்சுக்களை மேற்கொண்டுவருவதாகக் கூறப்படுவதை அறியும்போது வரப்போகும் - அல்லது தேர்தலின் பின்னர் பொறுப்பேற்கப்போகும் புதிய ஜனாதிபதி- தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பாக அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான முடிவெதனையும் எடுக்கும் பேரினவாத சிந்தனையற்ற நபராக இருக்கப்போவது கிடையாது என்ற அரசியல் யதார்த்தத்தை தமிழ்மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




**'உவர்சுற்றி' யார் பார்வையில்...**

# கொழும்பில் கதிர்காமர் மட்டுந்தானா? தமிழ் இளைஞர்களும் கொல்லப்படுகிறார்களே!

'எல்லா வீதிகளும் ரோமை நோக்கிப் போகின்றன' என்று ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி சொல்லப்படுவதுண்டு. நேற்று யாழ்ப்பாணத்து வீதிகள் எல்லாம் நல்லூரை நோக்கிப் போனதைக் கண்டேன் என்று சொல்லியபடி நண்பர் பரமசிவம் வந்தார்.

நல்லூர் முருகன் தேரில்வரும் அந்த அழகான காட்சியைக்கண்டு அவன் அருளைவேண்டி வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டின் பல இடங்களில் இருந்தும் மக்கள் வெள்ளமாகத் திரண்டு கூடிநின்று 'முருகா முருகா' என்றும் உளம் உருகி நின்ற காட்சி கண்கொள்ளாதது.

எனக்கும் அந்த தரிசனம் கிடைத்தது. அக்கிரமங்கள், அநியாயங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக, பாதுகாப்பாக வாழும் நிலை வேண்டும். முத்தமிழின் முருகா விரைவில் தமிழனுக்கு விடுதலை பெற்றுத்தா என்று வாய்விட்டு வழிபட்டோரையும் பார்த்தேன் என்று சொன்னேன்.

காணாமற்போன என் பிள்ளை திரும்பிவரவேண்டும் என்று ஒரு அன்னை கண்ணீர் மல்க வேண்டிநின்றதை நான் பார்த்து உருகிப் போனேன் என்று நண்பர் சொன்னார்.

இப்படி எத்தனை எத்தனை பேர் அழுதழுது நல்லூரானை வேண்டிக் கொண்டார்களோ தெரியவில்லை. நல்லூரான் தேரில் பவனி வருவதற்கு முதல்நாள் கிளிநொச்சியில் திரண்ட மக்கள் சமுத்திரம், தமிழ் மக்களின் விடுதலைக்கு உலக சமுதாயம் உதவி புரியவேண்டுமென்று குரல் எழுப்பியது.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபு வழித்தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எமது இறைமைக்கான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்று கிளிநொச்சி மாநாடு பிரகடனப்படுத்தியிருக்கிறது. இது சர்வதேச சமூகத்தின் காதில் விழுமா? என்று கேட்டேன்.

சர்வதேச ரீதியில் சிறிலங்காவின் பொய்ப்பிரசாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளிலுள்ள சிங்களவர்கள் சிறிலங்கா ஆதிக்க சக்திகளின் உதவியுடனும், சிறிலங்கா இனவெறி ஊடகங்களின் உதவியுடனும் பொய்ப்பிரசாங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். வெளிநாடுகளிலுள்ள சில ஊடகங்களையும் இவர்கள் தமக்குச் சார்பாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

போதாக்குறைக்கு எதையும் செய்யத் திராணியற்ற, கையாலாகாத நம்மவர் சிலர் விடும் அறிக்கைகளை அவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். எங்கள் மக்களுக்கு மறதியும் அதிகம். இங்கு சிங்களப்படைகளினால் மக்கள்பட்ட அவலங்களை போர் நிறுத்தம் என்ற மாயையில் மறந்து இன்று இனவெறியர்கள் ஆதிக்க சக்திகளினூடாக நடத்தும் நிழல்யுத்தங்களையும் நமது மக்கள் சரிவரப் புரிந்துகொள்கிறார்களில்லை.

வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள நம்மவரில் பலர் பழைய வாழ்க்கையையும், பட்ட அவலங்களையும் மறந்துவிட்டவர்களாகவும் வாழ்வது தெரிகிறது. இந்த நிலையில் நமது இன்றைய நிலையையும் சிங்கள ஆதிக்க சக்திகள் தொடர்ந்தும் தமிழ் பேசும் மக்களுக்கெதிராகக் காட்டும் பாரபட்சமான நடவடிக்கைகளையும் உலக நாடுகளுக்கு சரியான முறையில் எடுத்துக்காட்டவேண்டியது அவசியமாகும்.

கடற்கோளால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் மனமிரங்கிக் கொடுத்த உதவிகளைக் கூடப் பங்கிட்டுக்கொடுப்பதற்கு என்ன பாடுபடவேண்டியிருக்கிறதென்பதை உலக நாடுகளுக்கு நாம் இன்னமும் சரியாக உணர்த்தவில்லையென்றே தோன்றுகிறது.

கதிர்காமரின் கொலையை உலக நாடுகளுக்கு சிங்கள அரசும், இனவெறி ஊடகங்களும் புலிகள்மீது மீண்டும் மீண்டும் பழிபோட்டு உலக நாடுகளில் பிரசாரம் செய்கின்றன. இதே சமயம் வெளிநாட்டிலிருந்து வந்த உறவினரை வரவேற்கச்சென்ற யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த இரண்டு அப்பாவி இளைஞர்கள் கொழும்பு நகரில் போய் இறங்கியதும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதும் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று கொழும்பு ஊடகங்கள் சில புலிமுத்திரை குத்தின. சில தினங்களுக்கு முன் வெளிநாடு சென்றவர்களை வழியனுப்பிவிட்டு திரும்பிய மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்த இருவர் கடத்திக் கொலைசெய்யப்பட்டனர்.

இப்படி இப்பொழுது கொழும்பிலும் சுற்றுப்புற நகரங்களிலும் தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுகிறார்கள். பிந்துனுவெவவில் அப்பாவி சிறுவர்களும் இளைஞர்களுமாக 27 பேர் படுமோசமாக கொல்லப்பட்டனர். இக்கொலைகள் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

குமார் பொன்னம்பலம், ஊடகவியலாளர் சிவராம் கொலைபற்றி யாரும் பேசவில்லை. கதிர்காமரின் கொலையைப் பற்றிப் பேசுவோர் இந்தக் கொலைகள் பற்றிப் பேசுவதில்லை. இவற்றைப் பற்றி உலகந்நாடுகளுக்கு நாம் எடுத்துச்சொல்லவேண்டும். இன்று பழையபடி தமிழர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள்.

சொந்த நாட்டிலேயே தமிழர்கள் சந்தேகப் பிரஜைகளாகக் கணிக்கப்படுகிறார்கள். தமிழ்மக்கள் சுதந்திரமாவோ பாதுகாப்பாகவோ இலங்கையில் வாழமுடியாத நிலையை உலக நாடுகளுக்கு நாம் எடுத்துச்சொல்லவேண்டும் என்று பரமசிவம் மூச்சுவிடாமல் சொல்லி முடித்தார்.

புலிகள் போருக்குத் தயாராகிறார்கள் என்று அரசாங்கமும் அரச படையினரும் சொல்லிக்கொண்டு உலக நாடுகளிலெல்லாம் ஆயுதங்களையும் படைச்சாதனங்களையும் இலங்கை அரசு வாங்கிக் குவித்துக்கொண்டிருக்கிறது. வடக்கிலும் - கிழக்கிலும் இராணுவ முகாம்கள் விரிவாக்கப்படுகின்றன. பலப்படுத்தப்படுகிறது. புலிகள் முகாம்களைப் பலப்படுத்துவதாக பிரசாரம் செய்கிறார்கள். இவை பற்றியெல்லாம் உலக நாடுகளுக்கு எடுத்துச்சொல்லவேண்டாமா? என்றேன்.

கண்டிப்பாகச் சொல்லவேண்டும். உலக நாடுகள் பலவும் இலங்கை அரசுக்கு கொடுத்த ஆயுதங்கள் இன்று நாடு முழுவதும் பரவி நாட்டில் கொலைகள் மலிந்துவிட்டன.

வடக்கிலும் - கிழக்கிலும் கொழும்பிலும் மட்டுமல்ல, நாட்டின் மற்றைய பகுதிகளிலும் ஆயுதங்கள் மலிந்துவிட்டன. தென்னிலங்கையில் ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் ஆலைகளே இருக்கின்றனவாம்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக என்று அரசாங்கம் கேட்டு வாங்கிய ஆயுதங்கள் இன்று அரசே சொல்லும் பாதாள உலகக் கோஷ்டிகளிடமும் அரச பயங்கரவாதிகளிடமும் நிறைந்து கிடக்கின்றன. போகிற போக்கைப் பார்த்தால் இலங்கையில் ஆயுதங்கள்தான் மிஞ்சி ஆட்கள் மிஞ்சமாட்டார்கள் போலிருக்கிறது என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கு தெரிவானோர் விபரம்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது.

பிரதேச ரீதியாகத் தெரிவானோர்களின் விபரம் வருமாறு:

தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2005
நிதித்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

## மூப்படிப்படையில் தெரிவானோர்

நேற்றைய தொடர்ச்சி....

325 யா/உ/2077 திரு. கந்தையா வைத்தியநாதர்
326 யா/உ/2081 திரு. வல்லி வடிவேலு
327 யா/உ/2083 திரு. தம்பையா வடிவேலு
328 யா/உ/2090 திரு. செல்லையா அப்புத்துரை
329 யா/உ/2100 திரு.செல்லையா அந்தோனிப்பிள்ளை
330 யா/உ/2115 திரு. கந்தையா இளையையா
331 யா/உ/2120 திரு. அப்பாப்பிள்ளை காசிப்பிள்ளை
332 யா/உ/2128 திரு. இளையதம்பி கணபதிப்பிள்ளை
333 யா/உ/2140 திரு. சுப்பையா நடராசா
334 யா/உ/2149 திரு. சீனியர் நடராசா
335 யா/உ/2150 திரு. அம்பலவாணர் நடராசா
336 யா/உ/2151 திரு. கோவிந்தர் நாகையா
337 யா/உ/2155 திரு. வீரசிங்கம் பொன்னம்பலம்

(தொடரும்)

338 யா/உ/2162 திரு. இளையதம்பி பரமநாதன்
339 யா/உ/2164 திரு. சின்னையா பொன்னம்பலம்
340 யா/உ/2165 திரு. கந்தவனம் பரமநாதன்
341 யா/உ/2170 திரு. சின்னயா பூதப்பிள்ளை
342 யா/உ/2177 திரு. தம்பாப்பிள்ளை இரத்தினம்
343 யா/உ/2178 திரு. சுப்பிரமணியம் இராசையா
344 யா/உ/2180 திரு. தம்பிமுத்து இரத்தினசிங்கம்
345 யா/உ/2182 திரு. முருகேசு இராசரத்தினம்
346 யா/உ/2183 திரு. கந்தையா இரத்தினம்
347 யா/உ/2190 திரு. கந்தையா சிவலிங்கம்
348 யா/உ/2193 திரு. சின்னத்தம்பி சிவஞானம்
349 யா/உ/2195 திருமதி. சிவபாக்கியம் கனகரத்தினம்
350 யா/உ/2201 திருமதி. செல்லமுத்து சின்னத்துரை
351 யா/உ/2203 திரு. நாகலிங்கம் செல்வநாயகம்
352 யா/உ/2220 திருமதி. சிவகங்கை சின்னத்துரை
353 யா/உ/2235 திரு. மாணிக்கம் தம்பியையா
354 யா/உ/2243 திரு. சின்னையா வல்லிபுரம்
355 யா/உ/2250 திரு. கதிரேசு யோகர்
356 யா/உ/2251 திரு. பொன்னையா இராசையா
357 யா/உ/2253 திரு. கந்தையா விசுவலிங்கம்
358 யா/உ/2262 திருமதி. மீனாட்சி நாகமுத்து
359 யா/உ/2275 திரு. அப்புத்துரை செல்வநாயகம்
360 யா/உ/2298 திரு. தாமோதரம்பிள்ளை சின்னத்துரை
361யா/உ/2320 திரு. சின்னத்துரை பூபாலன்
362 யா/உ/2324 திரு. பொக்கன் சுப்பிரமணியம்
363 யா/உ/2330 திரு. காசித்தம்பி சாந்தலிங்கம்
364 யா/உ/2331 திரு. இராமு சீவரத்தினம்
365 யா/உ/2337 திரு. கனகராஜர் ஜோகவனம்
366 யா/உ/2343 திருமதி. இராசம்மா சுவாமிநாதர்
367 யா/உ/2355 திரு. வீரசிங்கம் கந்தையா
368 யா/உ/2359 திரு. இராமநாதர் நடராசா
369 யா/உ/2365 திருமதி. பொன்னம்மா செல்வராசா
370 யா/உ/2377 திரு. நமசிவாயம் திருநாவுக்கரசு
371 யா/உ/2382 திருமதி. அன்னமுத்து தம்பிஜயா
372 யா/உ/2392 திரு. முருகன் மாணிக்கம்
373 யா/உ/2401 திரு. சின்னத்தம்பி இரத்தினம்
374 யா/உ/2420 திரு. கந்தையா கதிரேசபிள்ளை
375 யா/உ/2424 திருமதி. நாகம்மா தில்லையம்பலம்
376 யா/உ/2430 திரு. சீனித்தம்பி [illegible]துரை
377 யா/உ/2434 திரு. சிவலிங்கம் [illegible]யாளன்
378 யா/உ/2443 திரு. பொன்னம்ப[illegible]
379 யா/உ/2444 திரு. இளையதம்[illegible]
380 யா/உ/2467 திரு. நல்லையா [illegible]
381 யா/உ/2469 திருமதி. சிதம்பர[illegible]
382 யா/உ/2470 திரு. அரியகுட்டி [illegible]தினம்
383 யா/உ/2471 திரு. தம்பு தருமலிங்கம்
384 யா/உ/2478 திரு. நல்லதம்பி சின்னையா
385 யா/உ/2504 திரு. சின்னத்தம்பி பேனாட் ஜூசைப்பிள்ளை
386 யா/உ/2513 திருமதி. பிறேம்றோஸ் ஜெயதேவி குணரத்தினம்
387 யா/உ/2520 திரு. சங்கரப்பிள்ளை கனகலிங்கம்
388 யா/உ/2521 திருமதி. நவமலர் கதிரமலைநாதன்
389 யா/உ/2527 திரு. சரவணமுத்து குகநாகராசா
390 யா/உ/2565 திருமதி. விசாலாட்சி துரைசிங்கம்
391 யா/உ/2595 திருமதி. இரத்தினம் திருவிளங்கம்
392 யா/உ/2601 திரு.இராமுப்பிள்ளை இராசரத்தினம்
393 யா/உ/2612 திரு.முத்துக்குமாரு ஜெயராஜசிங்கம்
394 யா/உ/2613 திரு. சின்னப்பு கண்ணுச்சாமி
395 யா/உ/2615 திருமதி. குணபூபதி அரியரட்ணம்
396 யா/உ/2627 திரு. சுப்பிரமணியம் நடராசா
397 யா/உ/2632 திருமதி. தங்கம்மா சிவானந்தம்
398 யா/உ/2635 திருமதி. விஜயலட்சுமி கந்தசாமி
399 யா/உ/2644 திரு. முருகேசு சின்னத்தம்பி
400 யா/உ/2655 செல்வி. கோகிலாதேவி இராசையா
401 யா/உ/2667 திரு. கந்தவனம் சிவஞானசுந்தரம்
402 யா/உ/2669 திரு. கதிர்காமு குணநாயகம்
403 யா/உ/2670 திரு. கந்தையா பொன்னுத்துரை
404 யா/உ/2685 திருமதி. எற்னறவமணி பேரின்பநாயகம்
405 யா/உ/2686 திருமதி. சிவபாக்கியம் வைத்திலிங்கம்
406 யா/உ/2688 திருமதி. நல்லம்மா புஸ்பராசா
407 யா/உ/2690 திரு. அருமைநாயகம் தயானந்தன்
408 யா/உ/2698 திரு. கந்தையா பாலசிங்கம்
409 யா/உ/2703 திரு. சின்னத்தம்பி கந்தையா
410 யா/உ/2704 திருமதி. கமலாதேவி பரஞ்சோதி
411 யா/உ/2706 திருமதி. மேரி யோசப்பின் அரியதாசன்
412 யா/உ/2708 திரு. சின்னப்பொடி நடராசா
413 யா/உ/2709 திரு. கதிர்காமர் நாராயணபிள்ளை
414 யா/உ/2719 திருமதி. செல்வரத்தினம் சிவராமலிங்கம்
415 யா/உ/2736 திருமதி. அமராவதி சின்னநயினர்
416 யா/உ/2738 திரு. வைத்தி முத்தையா
417 யா/உ/2746 திருமதி. செல்வச்சிரோன்மணி வைத்திலிங்கம்
418 யா/உ/2750 திரு. சங்கரப்பிள்ளை கந்தையா
419 யா/உ/2755 திரு. சின்னத்தம்பி சிவராசா
420 யா/உ/2757 திரு. கார்த்திகேசஜயர் வைத்தியநாதஜயர்
421 யா/உ/2759 திரு. வெற்றிவேலு பத்மநாதன்
422 யா/உ/2762 திருமதி. விமலேஸ்வரி பத்மநாதன்
423 யா/உ/2769 திரு. மருதப்பு கணேசு
424 யா/உ/2772 திருமதி. தங்கம்மா குமாரசாமி
425 யா/உ/2785 திரு. அழகக்கோன் பாலசிங்கம்
426 யா/உ/2796 திருமதி. இராசமணி நல்லையா
427 யா/உ/2801 திரு. கார்த்திகேசு தம்பிராசா
428 யா/உ/2803 திரு. கனகசபை தியாகராசா
429 யா/உ/2818 திரு. நடராஜா நகுலராஜ்
430 யா/உ/2827 திரு. தம்பிஜயா பொன்னுத்துரை
431 யா/உ/2836 திரு. அப்பச்சி முருகையா
432 யா/உ/2837 திரு.கணபதி செல்லையா இராசையா
433 யா/உ/2844 திரு. சின்னையா சிவநாதன்
434 யா/உ/2846 திரு. இரத்தினம் சாம்பசிவம்
435 யா/உ/2859 திருமதி. லிடியா இராசமணி தம்பு
436 யா/உ/2864 திரு. நாகமுத்து சின்னத்துரை
437 யா/உ/2869 திரு. பொன்னையா தம்பித்துரை
438 யா/உ/2871 திரு. சபாரத்தினம் பரமேஸ்வரன்
439 யா/உ/2872 திரு. செல்லப்பா நாகலிங்கம்
440 யா/உ/2876 திரு. சின்னத்தம்பி தெய்வேந்திரம்
441 யா/உ/2890 செல்வி. சந்திரவதனா குலசேகரம்
442 யா/உ/2898 திரு. வைத்தீஸ்வரஜயர் யோகீஸ்வரன்
443 யா/உ/2908 திருமதி. தங்கம்மா இராசேந்திரம்
444 யா/உ/2911 திரு. தம்பிமுத்து நவரட்ணராஜா
445 யா/உ/2920 திரு. சிவசம்பு நடராஜா
446 யா/உ/2929 திருமதி.ஞானபூங்கோதை சிவஞானம்
447 யா/உ/2933 திருமதி. நேசமலர் யோகரத்தினம்
448 யா/உ/2938 திரு. பொன்னையா துரைராசா
449 யா/உ/2955 திரு. சீனிவாசகம் பரரா[illegible]ிங்கம்
450 யா/உ/2967 திருமதி. பூமலர் பொன்னம்பலம்
451 யா/உ/2972 திரு. விசுவநாதஜயர் பரமேஸ்வரன்
452 யா/உ/2975 திருமதி. பற்குணமலர் பாலசுப்பிரமணியம்
453 யா/உ/2981 திரு. தட்சணாமூர்த்தி ஆறுமுகசாமி
454 யா/உ/2992 செல்வி.வசந்தநாயகி செல்லத்துரை
455 யா/உ/2995 திருமதி. சரஸ்வதி பராசசிங்கம்
456 யா/உ/2996 திரு. சின்னத்தம்பி குலத்துங்கம்
457 யா/உ/3000 திரு. தம்பு சுவாமிநாதன்
458 யா/உ/3001 திருமதி.தெய்வநாயகி சண்முகநாதன்
459 யா/உ/3005 திருமதி.மகேஸ்வரி இரத்தினசிங்கம்
460 யா/உ/3029 திரு. இளையதம்பி சரவணமுத்து
461 யா/உ/3031 திருமதி. சிவகாமசுந்தரி கதிரவேலு
462 யா/உ/3032 திரு. நாகமுத்து பொன்னுத்துரை
463 யா/உ/3035 திரு. செல்லையா செல்வராசா
464 யா/உ/3038 திரு. நாகராசா தியாகராசா
465 யா/உ/3056 திரு. வீரவாகு கனகசபாபதி
466 யா/உ/3062 திரு. வல்லிபுரம் பரராசா
467 யா/உ/3067 திரு. சீனியர் மயில்வாகனம்
468 யா/உ/3076 திரு. இராமு இராசதுரை
469 யா/உ/3092 திரு. செல்லத்துரை பூபாலசிங்கம்
470 யா/உ/3094 திரு. வயித்திலிங்கம் சுப்பிரமணியம்
471 யா/உ/3095 திரு. வல்லிபுரம் சதாசிவம்
472 யா/உ/3101 திரு. கந்தையா நடராசா
473 யா/உ/3103 திருமதி. இரத்தினம் தம்பிஜயா
474 யா/உ/3120 திரு. முருகேசு பரமலிங்கம்
475 யா/உ/3121 திருமதி. தெய்வானைப்பிள்ளை செல்லையா
476 யா/உ/3128 திருமதி. சீதாலட்சுமி காசிப்பிள்ளை
477 யா/உ/3129 திருமதி. கனகேஸ்வரி தேவராசா
478 யா/உ/3131 திரு. இளையதம்பி தம்பையா
479 யா/உ/3153 திருமதி. சரஸ்வதி கந்தசாமி
480 யா/உ/3155 திரு. சீனிவாசகம் கனகரத்தினம்
481யா/உ/3169 திருமதி. இராஜேஸ்வரி மார்க்கண்டு.
482 யா/உ/3180 திரு. சின்னக்குட்டி இரத்தினசிங்கம்
483 யா/உ/3207 திருமதி. நாகேஸ்வரி சிவசம்பு
484 யா/உ/3223 திரு. செல்லையா துரைராசா
485 யா/உ/3235 திருமதி. செல்வராசாத்தி ஆனந்தநாயகம்
486 யா/உ/3239 திரு. முதலித்தம்பி தம்பிஜயா
487 யா/உ/3241 திருமதி. இரத்தினம் நவரத்தினம்
488 யா/உ/3247 திருமதி. பஞ்சவர்ணம் இரத்தினம்
489 யா/உ/3251 திரு. அப்பாக்குட்டி செல்வரத்தினம்
490 யா/உ/3269 திருமதி. புஷ்பமலர் கணேசன்
491 யா/உ/3293 திரு. மங்கயற்கரசி தம்பிராசா
492 யா/உ/3323 திரு. தில்லையம்பலம் இராசையா
493 யா/உ/3334 திருமதி. காந்தரூபி சுப்பிரமணியம்
494 யா/உ/3340 திருமதி. ரட்ணபூபதி பற்றிக்
495 யா/உ/3353 திரு. விசுவநாதர் குசலவன்
496 யா/உ/3362 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
497 யா/உ/3369 திருமதி. தங்கம்மா கந்தையா
498 யா/உ/3373 திரு. முத்து தம்பிப்பிள்ளை
499 யா/உ/3375 திரு. கணபதி நாகலிங்கம்
500 யா/உ/3382 திருமதி. கனகமணி இராமலிங்கம்
501 யா/உ/3388 செல்வி. சோதிமலர் சின்னத்தம்பி
502 யா/உ/3423 திரு. வைத்திலிங்கம் செல்லையா
503 யா/உ/3424 திருமதி. செல்லம்மா மார்க்கண்டு
504 யா/உ/3442 திரு. ஆறுமுகம் இராஜேந்திரம்
505 யா/உ/3443 திரு. பொன்னு சின்னமணி
506 யா/உ/3446 திரு. க.சண்முகம் சாம்பசிவம்
507 யா/உ/3450 திருமதி. நல்லம்மா ஐயாத்துரை
508 யா/உ/3451 திருமதி. பூவதி கிருஷ்ணன்
509 யா/உ/3456 திருமதி. மரியம்மா அருளானந்தம்
510 யா/உ/3461 திருமதி. குட்டிப்பிள்ளை சின்னப்பு
511 யா/உ/3468 திரு. கந்தசாமி காசிலிங்கம்
512 யா/உ/3469 திரு. சின்னையா பாலசிங்கம்
513 யா/உ/3500 திருமதி.தங்கரத்தினம் சின்னத்துரை
514 யா/உ/3502 திரு. செல்லர் வீரசிங்கம்
515 யா/உ/3503 செல்வி. தர்மினி குமாரசுவாமி
516 யா/உ/3509 திருமதி. எலிசபெத் இராசேந்திரம்
517 யா/உ/3512 திரு.வேலுப்பிள்ளை நவரத்தினராசா
518 யா/உ/3514 திரு. சின்னையா அமிர்தலிங்கம்
519 யா/உ/3515 திரு. செல்லப்பா கதிரவேலு
520 யா/உ/3522 திரு. விஸ்வலிங்கம் மகாலிங்கம்
521யா/உ/3525 திருமதி. யோகராணி நடராசா
522 யா/உ/3526 திரு. சின்னையா துரைராசா
523 யா/உ/3533 திரு. சண்முகம் வேலும் மயிலும்
524 யா/உ/3544 திருமதி. சிவபாக்கியம் வேலாயுதபிள்ளை
525 யா/உ/3546 திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம்
526 யா/உ/3547 திரு. முருகன் பொன்னு
527 யா/உ/3555 திருமதி. கமலேஸ்வரி முருகையா
528 யா/உ/3561 திரு. சின்னையா தியாகரஜா
529 யா/உ/3563 திரு. நாகலிங்கம் முத்தையா
530 யா/உ/3569 திரு.இராமுப்பிள்ளை திருநாவுக்கரசு
531 யா/உ/3570 திரு.சரவணைமுத்து கிருஷ்ணபிள்ளை
532 யா/உ/3575 திரு. போல்கிறிஸ்மஸ்பிலிப்பையா ஞானதுரை
533 யா/உ/3582 திரு. காாத்திகேசுசெல்லையா நடராசா
534 யா/உ/3583 திரும்தி. சுந்தரா சிங்கம்
535 யா/உ/3589 திரு. வல்லிபுரம் நடராசா
536 யா/உ/3590 திரு. கதிரவேலு நடராசா
537 யா/உ/3594 திரு. முத்தையா சோமசுந்தரம்
538 யா/உ/3606 திரு. செல்லத்துரை சின்னராசா
539 யா/உ/3612 திருமதி. அன்னம்மா பொன்னையா
540 யா/உ/3618 திருமதி. தெய்வகுஞ்சரி தியாகராசா
541 யா/உ/3628 திரு. சோமசுந்தரம் பரமசாமி
542 யா/உ/3636 திரு. சுப்பையா அம்பலம்
543 யா/உ/3637 திரு. சிவகுரு நவரத்தினம்
544 யா/உ/3645 திரு. சின்னப்பு சின்னத்தம்பி
545 யா/உ/3654 திரு. இளையதம்பி அருணாசலம்
546 யா/உ/3659 திரு. கந்தையா ஆறுமுகம்
547 யா/உ/3671 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை
548 யா/உ/3674 திருமதி. மங்கையற்கரசி பாலசிங்கம்
549 யா/உ/3683 திரு. சுப்பிரமணியம் கதிரமலை
550 யா/உ/3691 திருமதி. அன்னம்மா செல்லத்துரை
551 யா/உ/3709 திருமதி. தையல்நாயகி மயில்வாகனம்
552 யா/உ/3714 திரு. நாகநாதி இளையதம்பி
553 யா/உ/3715 திரு. ஐயாத்துரை சண்முகநாதன்
554 யா/உ/3721 திருமதி. தங்கம்மா சுப்பிரமணியம்
555 யா/உ/3722 திரு. ஐயம்பிள்ளை மனோகரன்
556 யா/உ/3744 திரு. சீனிவாசம் இராஜரட்ணம்
557 யா/உ/3746 திரு. சீனி சுப்பிரமணியம்
558 யா/உ/3747 திருமதி. பரமேஸ்வரியம்மா சுப்பிரமணியக்குருக்கள்
559 யா/உ/3771 திரு. கந்தையா இரத்தினம்
560 யா/உ/3774 திரு. துரையப்பா நாகநாதன்
561 யா/உ/3775 திருமதி. புவனேஸ்வரி சபாரத்தினம்
562 யா/உ/3777 திரு. அம்பலபிள்ளை செல்வராஜா
563 யா/உ/3786 திரு. கிருஷ்ணபிள்ளை பொன்னுத்துரை
564 யா/உ/3802 திரு. சுப்பர் கனகரத்தினம்
565 யா/உ/3803 திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு
566 யா/உ/3806 திரு. கணபதி வல்லிபுரம்
567 யா/உ/3809 திரு. அழகேசு நடராசா
568 யா/உ/3823 திரு. தம்பையா கனகசபாபதி
569 யா/உ/3840 திரு. கார்த்திகேசு சோமசுந்தரம்
570 யா/உ/3848 திரு. ஆறுமுகம் முத்துவேலு
571 யா/உ/3851 திரு. நாகமணி தம்பிப்பிள்ளை
572 யா/உ/3863 திரு. ஐயம்பிள்ளை நல்லையா
573 யா/உ/3864 திரு. வேலுப்பிள்ளை ஞானரத்தினம்
574 யா/உ/3866 திருமதி. இராசேஸ்வரி இராசரத்தினம்
575 யா/உ/3868 திரு. கதிரன் மார்க்கண்டன்
576 யா/உ/3882 திரு. கந்தையா தம்பிராசா
577 யா/உ/3885 திரு. சின்னத்தம்பி தம்பையா
578 யா/உ/3907 திரு. சுப்பிரமணியம் ஜெயரத்தினம்
579 யா/உ/3910 திரு. பிரான்சிஸ் மரியஅருமைநாயகம்
580 யா/உ/3934 திரு. அம்பலவாணர் குட்டித்தம்பி
581 யா/உ/3947 திரு. சிவசம்பு இரத்தினம்
582 யா/உ/3951 திரு. செல்லப்பா செல்வரத்தினம்
583 யா/உ/3972 திரு. செல்லத்துரை சின்னத்தம்பி
584 யா/உ/3987 திரு. பொன்னையா சுவாமிநாதபிள்ளை
585 யா/உ/3990 திருமதி. சமீஜீனாம்பாள் சிவஞானஜயர்
586 யா/உ/3993 திருமதி. பாக்கியம் துரைராசா
587 யா/உ/3998 திரு. கதிரவேலு சுப்பிரமணியம்
588 யா/உ/4008 திரு. முருகேசு கந்தசாமி
589 யா/உ/4010 திரு. கோவிந்தா இரத்தினசபாபதி
590 யா/உ/4012 செல்வி. ரஜிகலா பொன்னம்பலம்
591 யா/உ/4022 திருமதி. தங்கமுத்து தம்பிராசா
592 யா/உ/4035 திரு. ஆறுமுகம் சிவதாசன்
593 யா/உ/4041 திரு. கனகரத்தினம் சந்திரசேகரி
594 யா/உ/4044 திரு. கென்றி பாலசிங்கம்
595 யா/உ/4051 திரு. வைத்திலிங்கம் சுந்தரம்
596 யா/உ/4052 திரு. இராமசாமி செல்லத்துரை
597 யா/உ/4053 திரு. குமாரகுலசிங்கம் பிரபாகரன்
598 யா/உ/4057 திரு. தம்பு சேனாதிராயர்
599 யா/உ/4062 திருமதி. மரியம்மா இராயப்பு
600 யா/உ/4078 திரு. இளையதம்பி இராசையா
601 யா/உ/4079 திரு. சுப்பையா சின்னத்துரை
602 யா/உ/4081 திருமதி. மாயகாந்தி கனகரத்தினம்
603 யா/உ/4086 திரு. வெலிச்சோர் ஆபரணம்
604 யா/உ/4091 திரு. சின்னத்துரை சச்சிதானந்தம்
605 யா/உ/4097 திரு. சின்னத்தம்பி நடராசா
606 யா/உ/4112 திரு. பொன்னம்பலம் இராசரத்தினம்
607 யா/உ/4126 திரு. வயித்திலிங்கம் நவரத்தினம்

(தொடரும்)

## அமெரிக்க வரலாற்றில் முதன்முறையாக

# கத்ரீனா சூறாவளி தாக்கத்தினால் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி!

## பெருமளவு சொத்துக்களும் இழப்பு



நியூயோர்க்-


அமெரிக்க வரலாற்றில் இது போன்றதொரு துயரமான சம்பவம் நடந்ததில்லை என்ற அளவுக்கு கத்ரீனா சூறாவளி கடற்கரையோர மாகாணங்களைப் புரட்டிப்போட்டுவிட்டது. நியூ ஆர்லியன்ஸ் நகரில் மட்டும் ஆயிரம்பேர் இறந்துவிட்டனர். இந்த நகரமே தண்ணீரில் மிதந்துகொண்டிருக்கிறது. மூன்று மாகாணங்களிலும் 20 லட்சம் பேர் மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி இன்றி தவிக்கின்றனர். வெள்ளத்தால் சூழப்பட்ட பகுதிகளை விமானத்தில் சென்று பார்வையிட்ட அதிபர் புஷ், இந்தப் பாதிப்பில் இருந்து மீண்டுவர பல ஆண்டுகளாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் தென்பகுதியில் கடற்கரையோரமாக மிசிசிபி, லூசியானா, அலபாமா மாகாணங்கள் உள்ளன.

கடந்த சில நாட்களுக்கு முன் கத்ரீனா என்று அழைக்கப்படும் ஆக்ரோஷமான சூறாவளி இந்த மூன்று மாகாணங்களில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்திவிட்டது. ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்துவிட்டன. பாலங்கள் நொருங்கி போக்குவரத்து அடியோடு துண்டிக்கப்பட்டுவிட்டது. நீரில் மூழ்கி பலர் இறந்துவிட்டனர். இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளின் கூரைகள் மீதேறி மீட்புப் படையினரை எதிர்நோக்கி பல நாட்களாக காத்திருக்கின்றனர். லட்சக்கணக்கானவர்கள் தங்கள் வீடு, உடமைகளை விட்டுவிட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துவிட்டது.

லூசியானா மாகாணத்தில் உள்ள நியூ ஆர்லியன்ஸ் நகரம்தான் கத்ரீனா சூறாவளியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நகரம் கடல் மட்டத்தைவிட தாழ்வான பகுதியில் அமைந்திருப்பதால் இயற்கை சீற்றங்களால் கடுமையாகப் பாதிக்கப்படும் என பல ஆண்டுகளுக்கு முன்பே கணித்து இருந்தனர். கத்ரீனா சூறாவளி வீசப்போகிறது என்ற எச்சரிக்கை விடுத்தும் லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லாததால், இந்தளவுக்கு உயிரிழப்பு ஏற்பட்டுவிட்டது என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

இந்த நகரில் பொன்சாட்ரெயின் என்ற ஏரி உள்ளது. கத்ரீனா சூறாவளி வீசியபோது இந்த ஏரியின் கரை பகுதியில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு நகருக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் 80 சதவீத பகுதி தண்ணீரில் முழ்கிவிட்டது. உடைப்பு ஏற்பட்ட பகுதிகளில் ராணுவ வீரர்கள் ஹெலிகொப்டரில் பறந்துசென்று மணல் மூட்டைகளைப் போட்டாலும் தண்ணீர் வெளியேறுவது நிற்கவில்லை. தொடர்ந்து ஏரியில் இருந்து தண்ணீர் வெளியேறி வருவதால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.





ஏராளமான இடங்களில் கட்டடங்கள் விழுந்து நொருங்கியும், பாலங்கள் உடைந்தும், தண்ணீரால் சூழப் பட்டும் போர்க்களம் போல் நியூ ஆர்லியன்ஸ் நகரம் உள்ளதால் உயிருடன் தவித்து வருபவர்களைக் காப்பாற்ற மீட்புக் குழுவினர் போராடி வருகின்றனர்.

நியூ ஆர்லியன்ஸ் நகரில் ஆயிரக்கணக்கான திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர். பூட்டியிருக்கும் சூப்பர்மார்க்கெட்டுகள், வர்த்தக நிறுவனங்கள், வீடுகள் ஆகிய இடங்களில் உட்புகுந்து கண்ணில் தென்படும் பொருட்களை எல்லாம் திருடிச் செல்கின்றனர். இதனால் மீட்புக் குழுவில் இடம்பெற்றிருந்த 1500 பொலிஸாரை திசைதிருப்பி, திருடர்களை வேட்டையாடும் பணியில் அதிகாரிகள் ஈடுபடுத்தியுள்ளனர். மீட்பு பணியுடன் சட்டம், ஒழுங்கு பிரச்சினையை சமாளிக்கும் பணியும் அதிகாரிகளைச் சோர்வடைய வைத்துள்ளது.

நியூ ஆர்லியன்ஸ் நகர மேயர் ராய் நாகின் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் -

நியூ ஆர்லியன்ஸ் நகரமே தண்ணீரில் மிதக்கிறது. நகரத்தை சீரமைத்து மீண்டும் செயற்பட வைக்க இரண்டு அல்லது மூன்று மாதங்களாகும். இந்த நகரில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசித்து வந்தனர். இவர்களில் 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் மக்கள் வரை தற்போது தண்ணீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் மாட்டிக்கொண்டுள்ளனர். அவர்களைப் பாதுகாப்பாக மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கத்ரீனா சூறாவளி வீசப்போகிறது என நாங்கள் விடுத்த எச்சரிக்கையை ஏராளமானவர்கள் பொருட்படுத்தவில்லை. பணப்பிரச்சினை மற்றும் மருத்துவப் பிரச்சினை காரணமாக பலர் நகரை விட்டு வெளியேறாமல் இருந்துவிட்டனர். அதிகாரிகள் கூறுவதைவிட இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என அஞ்சுகிறோம். நூற்றுக்கணக்கான உடல்கள் இன்னும் தண்ணீரில் மிதக்கின்றன என அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் முக்கிய மாகாணங்களில் ஒன்றான மிசிசிபி மாகாணம் கத்ரீனா சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 30 அடி உயரத்துக்கு பிரமாண்டமான சுவர் போல் கத்ரீனா சூறாவளி சுழன்று சுழன்று வீசியதில் இந்த நகரமே சுக்குநூறாகிவிட்டது. காணும் இடம் எல்லாம் கட்டடங்களின் இடிபாடுகள் தான். அணுகுண்டு வீசினால் எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்படுமோ அது போன்றதொரு சூழ்நிலை காணப்படுகிறது என்று மிசிசிபி ஆளுநர் ஹாலே பார்பர் கூறியுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கம் மூலம் 250 தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு 3.5 லட்சம் மக்களுக்கு உணவு அளிக்க ஏற்பாடுகள் நடந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ராணுவ தலைமையகமான பென்டகன் 10 ஆயிரம் வீரர்களை இதற்காக அனுப்பியுள்ளது. இத்துடன் அமெரிக்காவின் உளவு செயற்கை கோள்கள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகள் கத்ரீனா சூறாவளி வீசுவதற்கு முன் நிலைமை எப்படி இருந்தது. சூறாவளி வீசிய பின் நிலை எப்படி இருக்கிறது என்பது குறித்து ஆய்வு நடத்தி வருகிறது. எந்த அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டி ருக்கிறது. மீட்புப் பணியை மேற்கொள்ள எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகள் ஆலோசனை செய்கின்றனர்.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மூன்று மாகாணங்களையும் விமானத்தில் பறந்துசென்றபடி ஜனாதிபதி புஷ் பார்வையிட்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது -

அமெரிக்க வரலாற்றில் இது போன்றதொரு இயற்கை சீரழிவு ஏற்பட்டதில்லை. மீட்பு பணிகளை துரிதப்படுத்தினாலும் பாதிப்புகளில் இருந்து மீண்டு வர பல ஆண்டுகளாகும். மிசிசிபி மாகாணத்தில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அங்கு மறு சீரமைப்பு பணிகள் அதிக அளவில் மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின் இணைப்பு மற்றும் தகவல் தொடர்பை ஏற்படுத்தும் பணி தீவிரப்படுத்தப்படும். பாதிக்கப்பட்ட பாலங்கள், வீதிகளைச் சீர் செய்து வருகிறோம். தடையின்றி போக்குவரத்து இருக்க அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கத்ரீனா சூறாவளியில் இருந்து மக்களை மீட்காத அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஒரு முரட்டுத்தனமான மனிதரென வெனிசுலா ஜனாதிபதி கூகோ சாவெஸ் கூறியுள்ளார்.



அமெரிக்காவின் நடவடிக்கைகளை வெனிசுலா நாடு எப்போதும் விமர்சித்து வரும். அந்நாட்டு அமைச்சரவைகூட்டம் ஜனாதிபதிகூகோ சாவேஸ் தலைமையில் நடந்தது. இது தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. அப்போது ஜனாதிபதி கூகோ சாவெஸ் பேசுகையில் -



இயற்கைசீரழிவு ஏற்படும்போது மக்களை எப்படி அகற்ற வேண்டும் என்பதற்கு அமெரிக்க அரசிடம் எந்த திட்டமும் இல்லை. உலகில் முதன் நிலை சக்தியாக திகழ்வதாக கூறிக் கொள்பவர்கள் மக்களைக் காப்பாற்ற முடியவில்லை என்பது வேதனை அளிக்கும் ஒன்று. அவர்களின் கவனம் முழுவதும் ஈராக் மீதே இருந்தது. சொந்த நாட்டு மக்களை அம்போ என்று விட்டுவிட்டனர். கத்ரீனா பாதிப்பில் இருந்து மக்களை மீட்க முடியாத ஜனாதிபதி புஷ் ஒரு முரட்டு மனிதர் என அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழீழ மீட்புநிதி கடன் மீளல் - 2005 திகதி வாரியான விபரம் அறிவிப்பு!

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு கீழ் வரும் அட்டவனைக்கமைய உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

இந்த மீளளிப்பில் 2004 ஆம் ஆண்டுவரை மீளளிப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்டோரில் இதுவரை மீளப் பெறாதோரும் ஏதாவதொரு மீளளிப்பு நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமெனவும் அவர் தெரிவித்தார்.

**யாழ்.மாவட்டம்**

இடம்: முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.

நேரம்: காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை.

09.09.2005 (வெள்ளி), 10.09.2005 (சனி) - நல்லூர், 11.09.2005 (ஞாயிறு) - யாழ்ப்பாணம், 12.09.2005 (திங்கள்) - கோப்பாய், 13.09.2005 (செவ்வாய்) - உடுவில், 14.09.2005 (புதன்) - மானிப்பாய், 16.09.2005 (வெள்ளி) - தெல்லிப்பளை, 17.09.2005 (சனி) - சங்கானை, 18.09.2005 (ஞாயிறு) - கரவெட்டி, 19.09.2005 (திங்கள்) - பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு. 20.09.2005 (செவ்வாய்) - சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி. 21.09.2005 (புதன்) - வேலணை, காரைநகர்.

**வன்னிப் பகுதி**

23.09.2005 (வெள்ளி) - மாங்குளம் மகாவித்தியாலயம் - மாங்குளம் மு.ப 8.00 மணி. வருவாய்ப் பகுதிச் செயலகம் - புளியங்குளம் மு.ப.900. அக்கராயன் மகாவித்தியாலயம் - அக்கராயன் பி.ப. 1.30 மணி. கிளி.மத்திய கல்லூரி - கிளிநொச்சி - பி.ப. 3.30 மணி.

24.09.2005 (சனி) - பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம் - பூநகரி - காலை 8.30. முழங்காவில் மகாவித்தியாலயம் - முழங்காவில் - மு.ப.9.30 மணி. விடத்தல்தீவு றோ.க.பாடசாலை - கறுக்காய்க்குளம் - பி.ப. 12.30. வரு வாய்ப்பகுதிச் செலயகம் - மல்லாவி - பி.ப.5.30 மணி.

25.09.2005 (ஞாயிறு) - நெடுங்கேணி மகாவித்தியாலயம் - நெடுங்கேணி - மு.ப.9.30. ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் - ஒட்டுசுட்டான் - மு.ப. 10.30. வித்தியானந்தாக் கல்லூரி - தண்ணீரூற்று - ந.ப.12.00 மணி. ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் - புதுக்குடியிருப்பு - பி.ப. 2.30 மணி. விசுவமடு மகாவித்தியாலயம் - விசுவமடு - பி.ப.4.00 மணி.


## பதவி வெற்றிடம்.

யுனிசெப் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி : பொறியியலாளர்
   கல்வித்தகைமை : B.Sc (Civil) பொறியியலாளர். அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் கணினி அறிவு.
   அனுபவம் : குறைந்தது 3 வருட தொழில்சார் அனுபவம்
   சம்பளம் : ரூபா 26,000 (ஊழியர் சேமலாப நிதி நீங்கலாக)

2. பதவி : திட்டமிடல் கண்காணிப்பு இணைப்பாளர்,
   கல்வித் தகைமை : தொழில் நிர்வாகமாணி அல்லது வர்த்தகமாணி அல்லது கலைமாணி (பொருளியல் / புவியியல் சிறப்புப் பட்டதாரி)
   அனுபவம் : குறைந்தது 1 வருட தொழில்சார் அனுபவம்.
   சம்பளம் : ரூபா 22000 (ஊழியர் சேமலாப நிதி நீங்கலாக)

3. பதவி : கணனி தரவு பதியுநர்
   கல்வித் தகைமை : கணினி விஞ்ஞானமானியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து கீழ்வரும் கல்விக்கான சான்றிதழும், தொழில் அனுபவமும் இருத்தல் வேண்டும்.
   **Ms Office**
   **Database Management.**
   **Client Server Administration**
   **Computer Maintenance / Hardware**
   சம்பளம் : ரூபா 17 000 (ஊழியர் சேமலாப நிதி நீங்கலாக)

இப் பதவிநிலை முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலானது. இந் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு நிரந்தர நியமனம் கோரமுடியாது.

தகைமையுடையவர் சுயமாக தயாரித்த விண்ணப்பங்களைத் தங்களது சுய விபரத்துடன் அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 15.09.2005 இற்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பிக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி/4404)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சந்திரிகா நாடு திரும்பியதுமே தேர்தல் அறிவிப்பு வெளியாகும்!

சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பிய பின்னரே - ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுமென தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தலுக்கான வேட்புமனு கோரப்படும் திகதி மற்றும் தேர்தல் நடைபெறும் திகதி அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 5 ஆம் திகதி அச்சிடுவதற்காக தேர்தல் ஆணையாளரால் அரச அச்சக அதிகாரியிடம் கையளிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சந்திரிகா, நாடு திரும்பிய பின்னர் இந்த வர்த்தமானி அறிவிப்பை அச்சிட தேர்தல் திணைக்களம் தீர்மானித்திருப்பதாக அந்தத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி நாட்டில் இல்லாத வேளையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பது உகந்ததல்ல என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# பங்களாதேஷ் விமானப்படைத் தளபதி நாளை இலங்கைக்கு வருகிறார்!

கொழும்பு—

பங்களாதேஷ் விமானப் படைத் தளபதி எயர் வைஸ்மார்ஷல் பக்ரூல் அசாம் ஐந்துநாள் விஜயமாக நாளை இலங்கை வரவுள்ளார்.

இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொணால்ட் பெரேராவின் அழைப்பின் பேரில் இலங்கை வரும் இவர் - ஜனாதிபதி சந்திரிகாஇ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷஇ பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயவர்த்தன கூட்டுப்படைத்தளபதி அட்மிரல் தயாசந்தகிரி ஆகியோரையும் முப்படைத்தளபதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் இலங்கை விமானப் படைத்தளங்களையும் இவர் பார்வையிடவிருப்பதாக தெரியவருகிறது.

# ரவைகளுடன் சென்றவர் கொடுவாமடுவில் கைது!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு செங்கலடி- பதுளை வீதியில் கொடுவாமடு இராணுவ முன்னணி பொலிஸ் சோதனைச் சாவடியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டார்.

கிருஷ்ணபிள்ளை கிருஸ்ண குமார் என்ற இந்த நபரிடமிருந்து 11 துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டதாக இராணுவத்தரப்புக் கூறியுள்ளது.

மேலதிக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக இவர் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு இராணுவ காவலரண் மீதும் ஆரையம்பதி விசேட அதிரடிப்படை முகாம்மீதும் இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுகள் வீசப்பட்ட போதிலும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பொலிஸ் இடமாற்றங்கள் தேர்தல் காலத்தில் நிறுத்தம்

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக் கோரப்பட்ட பின்னர் - தேர்தல் முடிவடையும்வரை பொலிஸாருக்கான இடமாற்றங்கள் அனைத்தையும் இடைநிறுத்தி வைக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தேர்தல் காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் பொலிஸ் இடமாற்றங்கள் - தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதகமாக அமையலாம் எனக் கருதப்படுவதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆயினும் பொலிஸார் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பேரிலான இடமாற்றங்கள் வழமைபோல இந்தக்காலப்பகுதியில் தொடர்ந்து இடம்பெறும் என்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## தமிழ்...

8.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இவர், உடனடியாக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போது இடைவழியிலேயே உயிரிழந்தார்.

கருணா குழுவுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் இவர், கடந்த ஏப்ரல் மாதம் முதல் வெள்ளவத்தையில் வசித்துவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் தங்கராசா
(இளைப்பாறிய ஆசிரியை)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி பூரணம் தங்கராசா (இளைப்பாறிய ஆசிரியை) நேற்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராமசாமி தங்கராசாவின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், சத்திரவதனா, பாலச்சந்திரன், ஜெயச்சந்திரன், ஞானச்சந்திரன், குலச்சந்திரன், ஜீவச்சந்திரன் (கனடா), சுகுணச்சந்திரன் (கனடா), நவச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருளம்பலம், சுமித்திரா, ஞானமலர், கருணாமலர், வசந்தி, சுகந்தி, வசந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று சனிக்கிழமை (03.09.2005) அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்க ஆராதனை அளவெட்டி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அளவெட்டி வடக்கு, பிள்ளைகள், மருமக்கள்
கருகப்புலம். (2035) பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


## தேர்தலில்...

குழுவினருடனான சந்திப்பின்போதே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அந்தக் குழுவிடம் மகிந்த ராஜபக்ஷ கூறியதாவது -

நானும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் இலங்கையில்தான் பிறந்தவர்கள். இது எங்களுடைய பிரச்சினை. அதனால், நாங்கள் பேச்சு நடத்த வெளிநாட்டு அனுசரணையாளர்கள் எவரும் தேவையில்லை. நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பிரபாகரனுடன் நேரடியாகப் பேச்சு நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பேன் என்றார்.

## வான்...

குள்ளாகியிருப்பது தொடர்பாக இலங்கை தரப்பினர் தெரிவித்தனர்.

இதற்குப் பதலளித்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் - புலிகளின் விமானங்களை முறியடிக்கும் வான் பாதுகாப்பு சாதனங்களை இலங்கைக்கு வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

சீனாவிடமிருந்து வான் பாதுகாப்பு சாதனங்களை வாங்குவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா தீவிர கவனமெடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

அதேவேளை, புலிகளின் விமான அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான வான் பாதுகாப்பு சாதனங்களை வழங்குவதற்கு செக். குடியரசும், கடந்த சில மாதங்களுக்கு முன் இந்தியாவும் விருப்பம் தெரிவித்திருந்தன

சீனாவும், இந்தியாவும் எதிரெதிர் நாடுகளாக இருப்பதால் வான் பாதுகாப்பு சாதனங்களையாரிடம் கொள்வனவு செய்வது என்பது குறித்து இலங்கை அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இலங்கையுடன் பாதுகாப்பு உடன்பாடு செய்துகொள்வதற்கு இந்தியா சற்றுப் பின் நிற்பதால் சீனாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை வெளிவிவகார முன்னாள் அதிகாரி ஒருவர் ஆலோசனை தெரிவித்திருந்தார். எனினும், இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கும் பிரதான நாடாக சீனா இருந்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கடற்படை...

கடற்படையினரின் படகொன்று கடற்தொழிலாளர்களின் படகை மோதியதுடன்-இரு கடற்தொழிலாளர்களும் கடற்படையினரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டனர். பின்னர் மீனவர்களை படகில் தூக்கி வீசிவிட்டு, கரைக்குச் செல்லுமாறு விரட்டினர்.

படையினரின் தாக்குதலில் காயமடைந்த இருதயராஜா யேசுதாஸ் (வயது 28), அருட்பிரகாஸ் அன்ரன் (வயது 34) ஆகிய இரு மீனவர்களே வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி சி.மயிலேறும் பெருமாள் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலைக்குச் சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள், இரு மீனவர்களையும் பார்வையிட்டு, விபரங்களைச் சேகரித்துச் சென்றனர். (14)

# 3 தடகள வீரர்கள் சியோலில் மாயம்!

சியோல்—

தென்கொரியாவில் நடை பெறும் ஆசிய தடகள சம்பியன் சிப் போட்டிகளில் பங்கேற்கச்சென்ற மூன்று தடகள வீரர்கள் காணாமற்போயிருப்பதாக சியோல்பொலிஸார் தெரிவித்தனர்.

சியோல் நகருக்கு அண்மையில் உள்ள ஹொட்டேல் ஒன்றில் தங்கியிருந்த இவர்கள் அங்கிருந்து வெளியே சென்றதாகவும்இ இதுவரை திரும்பி வரவில்லை என்றும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக தென் கொரியாவில் தங்கியிருப் பதற்காகவே இவர்கள் மறைந்திருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.


NEW SCIENCE ACADEMY
(KANTHANKARUNAI)
NALLUR
COMBINED MATHS
GROUP CLASS
* மொத்தல்
* வட்டம்
ஆரம்பம்:
05.09.2005
7.00 P.M
BY:M.RAJAN (B.Sc)
(C/4557)


# ஜனாதிபதித் தேர்தலில் ஜானக பெரேரா போட்டி!

## வெளிநாட்டு சிங்கள அமைப்புக்கள் முயற்சி

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவ அதிகாரி ஜனாக பெரேரா போட்டியிடவுள்ளார்.

36 நாடுகளில் உள்ள சிங்கள அமைப்புக்கள் இணைந்து மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை வேட்பாளராக நிறுத்தத் தீர்மானித்துள்ளன.

அத்துடன், ஜானக பெரேராவுக்கு ஆதரவளிப்பது குறித்து ஜாதிக ஹெல உறுமயவும் கவனம் செலுத்தியுள்ளது.

இந்தச் சிங்கள அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எட்டு உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் ஜாதிக ஹெலஉறுமய தலைமையகத்தில் அந்தக் கட்சியின் நிர்வாகிகளைச் சந்தித்து உரையாடினர்.

நாட்டின் இறைமையைப் பாதுகாத்தல், பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தல், சிங்கள இனத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய கொள்கைகளை முன்வைத்தே ஜானக பெரேராவை வேட்பாளராக நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை - மகிந்த ராஜபக்ஷவோ அல்லது ரணில் விக்கிரம சிங்கவோ நாட்டின் இறைமைப் பாதுகாப்புக் குறித்து எதுவித கருத்துக்களையும் வெளியிடாததால், எதிர்வரும் தேர்தலில் ஜானக பெரேராவுக்கு ஆதரவளிப்பது குறித்து ஜாதிக ஹெலஉறுமயவின் கவனம் திரும்பியுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# அடையாள அணிவகுப்பு நீதிவான் ஒத்திவைப்பு!



சந்தேக நபரை பொலிஸார் வெள்ளைத் துணியால் போர்த்தியபடி நீதிமன்றத்துக்குக் கொண்டுவந்த காட்சி

கொழும்பு—

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கொலை வழக்கில் சந்தேக நபராக விசேட குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டவரை எதிர்வரும் 10 ஆம் திகதி அடையாள அணிவகுப்பில் நிறுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துவதற்கு விசேட பாதுகாப்புகளுடன் நேற்று நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தினர். சந்தேக நபருக்கு ஒரு கை இல்லாதபடியால் சாட்சியாளர்களால் அவர் இலகுவாக இனங்காணப்படுவார் என்று நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து -

கை இழந்த நபர்களை அடையாள அணிவகுப்பில் நிறுத்துமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்ட நீதிவான் மேற்படி அடையாள அணிவகுப்பை 16 ஆம் திகதி நடத்துமாறும் உத்தரவிட்டார்.

## பனையிலிருந்து..

காணிக்குள் 60 அடி உயரமான பனைமீது ஏறி தொழிலை மேற்கொண்டபோது தவறிவீழ்ந்தார். உடனடியாக அயலவர்களின் உதவியுடன் மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது வழியிலேயே உயிரிழந்தார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் 5 வருடங்களுக்கு முன்னரும் பனையிலிருந்து தவறி வீழ்ந்து அதிஷ்டவசமாக உயிர் தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் பிரேத பரிசோதனையை மேற்கொண்டதுடன் பருத்தித்துறைப் பதில் நீதிவான் தங்கராசா மரண விசாரணையை மேற்கொண்டார்.

இதையடுத்து சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

## முன்னைய...

தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்கு தீர்வுகாணும் திறமை தென்னிலங்கையிடம் இல்லையென்பதை சர்வதேச சமூகத்திடம் வெளிப்படுத்தி வருகிறோம்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் நாம் அக்கறையுடன் இருக்கின்றோம். தென்னிலங்கை அரசியல் சமூகம் தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்கு தீர்வுகாணாது என்பதை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்துவதில் எமது தேசியத் தலைமை மிகவும் பொறுமையுடன் அவதானமாகவே செயற்பட்டு வருகிறது.

இத்தகைய செயற்பாடுகள் அனைத்துமே தமிழர் சுயநிர்ணய உரிமை என்ற இலக்கை நோக்கியதாகவே எமது தலைமையால் நகர்த்தப்பட்டு வருகிறது.

இது உரிய பலனை அளிக்கும் என்று நாம் நம்புகிறோம். விடுதலைப் புலிகளின் இந்தச் செயற்பாடுகளால் புலிகள் பலவீனமாக இருப்பதாக எண்ணுபவர்கள், தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள் என்பதுதான் உண்மையென பாலகுமாரன் மேலும் தெரிவித்தார்.

## பேச்சுக்களுக்கு..

இதனையடுத்து புலிகள் தரப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ இராணுவ சூனியப் பிரதேசத்திலோ பேச்சுக்கள் நடத்தப்படுவதற்கு புலிகள் மறுத்திருந்தனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இத்தகைய இடங்களில் பேசுவது சாத்தியமில்லை என்றும் கிளிநொச்சியில் பேச்சு நடத்தலாம் என்றும் புலிகள் அறிவித்திருந்தனர்.

ஆனால் இதையும் அரச தரப்பு நிராகரித்துவிட்ட நிலையில் நோர்வே அனுசரணையாளர்கள் - இரு பகுதியினரும் இணங்கக்கூடிய பொருத்தமான இடத்தை பேச்சுக்காகத் தெரிவு செய்வது சிக்கலுக்குரியதொன்றாகி விட்டது.

இந்த நிலையிலேயே நோர்வே அனுசரணையாளர்கள் பொருத்தமான இடம்குறித்து இரண்டு தரப்பினர்களுடனும் பேச்சுக்களை நடத்தி வருவதாக நோர்வே தூதரகப் பேச்சாளர் கிறிஸ்ரி ஸ்ட்ரோம்சார்ட் தெரிவித்தார்.

## சிங்கள...

நிறுவப்பட்ட சம்பவத்துடன் இவர் தொடர்புடையவர் எனக் கருதப்படுகிறது. நேற்றுமுன்தினம் இரவு காணாமற்போன இவர் கடத்திவரப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

சடலம் தற்போது திருமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அந்தச் சடலத்துக்கருகே இவர் பயணம் செய்த ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிள் தீயிட்டு எரிக்கப்பட்ட நிலையில் இருந்தது.

உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் காலையில் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பெருமளவு பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளதோடு இரு மணிநேரம் பொலிஸார் போக்குவரத்தைத் தடைசெய்திருந்தனர்.

தொடர்ந்தும் சிறிமாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பதற்றநிலை காணப்படுகிறது. தமிழ்மக்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தான் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரமுண்டு

## சட்டத்தரணி றெமிடியஸ்

யாழ்ப்பாணம் —

தனிமனிதனின் மதவழிபாட்டு சுதந்திரத்தைப் பற்றி விளக்கும் போது- சிந்தனை, மனச்சாட்சிக்கூடாகச் சுயாதீனமாக ஒருவர் தான் விரும்பும் ஒரு மதத்தைப் பின்பற்றவும், வழிபடவும், அந்தச் சமயம் பற்றிய அனுபவங்களைப் பிறருடன் பரிமாறிக் கொள்ளவும், போதிக்கவும் பூரண சுதந்திரமுண்டு என சட்டத்தரணி றெமிடியஸ் தெரிவித்தார்.

கியூடெக் - கரித்தாஸ் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், யாழ். மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழுவின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட மதமாற்றத் தடைச்சட்டம், மகளிர் உரிமைகளுக்கான சட்டபூர்வமான கருச்சிதைவு போன்றவற்றால் எழக்கூடிய விளைவுகள் பற்றி கடந்த 21 ஆம் திகதியன்று மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற கருத்தமர்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் -

இலங்கையின் அரசியல், மதம், பௌத்தம் என்ற அரசியல் யாப்புச் சட்டத்தைக் கையில் ஏந்தி, அந்த மதத்தின் பாதுகாவலர்களாகத் தம்மை இனங்காட்டிக் கொண்டு பிற மதங்களைக் கட்டுப்படுத்தி, மதச் சுதந்திரத்தைப் பறிக்கும் நோக்கில் கொண்டு வரப்படும் மதமாற்றத்தடைச் சட்டமானது இலங்கையில் ஒரே இனம், ஒரே மொழி, ஒரே மதம் என்பதை வலியுறுத்துவதற்கான முன் முயற்சியோ என எண்ணத் தோன்றுகிறது.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒருவர் தன் மதத்தைப் பற்றி இன்னொருவருடன் பேசுவது, விவாதிப்பது, சிந்தனையைக் கிளறி விடுவது போன்ற எந்தச் செயலை நிகழ்த்தினாலும், சட்டப்படி அவர் குற்றவாளியாகக் காணப்பட்டு 5 வருட சிறையும், 5 லட்சம் ரூபா அபராதமும் விதிக்க இடமளிக்கப்பட்டுள்ளது.

பெண்களாயின் சிறைத் தண்டனை 7 வருடங்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. சட்டத்துக்கு முரணானவர்கள் எனக் காணப்படுவோரைப் பிடிப்பதற்கு, பிடியாணை பிறப்பிக்கப்படவேண்டிய அவசியமில்லை. பொலிஸ் எந்த நேரமும் பிடிக்கலாம். வழக்குகளை ஒரு பிரதேச செயலரே தொடரலாம்.

பெண்ணுரிமைச் சட்டத்தின் மூலம் தாய்மையடைவதற்குரிய சுதந்திரம் பெண்ணுக்கே வழங்கப்படுகிறது. இதன்படி ஒரு பெண் தான் தாய்மையடைய விரும்பாத போதெல்லாம், தன் உடல் நிலை பாதிக்குமென்று கூறி - கருச்சிதைவு செய்வதைப் பெண்ணுரிமைச் சட்டம் சட்டபூர்வமானதாக்குகிறது. இதனைக் கத்தோலிக்க திருச்சபை முழுமையாக எதிர்க்கிறது.

தமிழினத்தைப் பொறுத்தவரை கூட எமது பண்பாட்டுக்குப் பொருத்தமானவையாகக் கருச்சிதைவை நாம் அணுக முடியாது. அதை ஆதரித்துக் குரல் கொடுப்பதன் மூலம், பாரிய பின் விளைவுகளை நாம் எதிர்நோக்க வேண்டி வரும். மண முறிவுகள் சர்வசாதாரணமாக்கப்பட்டுவிடும்.

இத்தகைய பாதிப்புக்குரிய சட்டத்தை $^2/_3$ பெரும்பான்மை பலத்தையும், மக்கள் கருத்துக் கணிப்பையும் கொண்டு நிறைவேற்ற முடியுமென்றாலும் கூட, சர்வதேச சமூகம் இதனை ஏற்றுக்கொள்ளாத வகையில் எமது உண்மையான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் கூறினார். (13)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் —

நியாப் திட்டத்தின் கீழ் பல நோக்கு மண்டபங்கள் அமைப்பது தொடர்பான கூட்டங்கள், இந்த மாதத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் 4 இடங்களில் நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டம் நேற்று முன் தினம் கைதடி கிழக்கிலும், மட்டுவிலிலும் நடைபெற்றது. 6 ஆம் திகதி வெள்ளாம்போக்கட்டியிலும், கரம்பை குறிச்சியிலும் தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# மாணவனை காணவில்லையென ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம் —

பாடசாலை மாணவன் ஒருவரைக் காணவில்லையென யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டின்படி - கடந்த 15 ஆம் திகதி இல 97, செம்மணி வீதி என்னும் முகவரியிலுள்ள தனது வீட்டிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டு, அன்றைய தினம் வவுனியாவில் இருந்து தந்தையுடன் தொலைபேசியில் உரையாடிய இவர், வவுனியாவில் இருந்து கொழும்புக்கு ரயிலில் பயணம் செய்யவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதன்பின்னர் அவர் தொடர்பான தகவல் எதுவும் கிடைக்கவில்லை என தந்தையார் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடையவர் யாழ்.பரியோவான் கல்லூரி மாணவனான மாசிலாமணி யூட் ஜெனி (வயது 18) என்பவராவார்.

# சுயவிருப்பின்றி இடமாற்றம்; பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு

சுன்னாகம் —

சுன்னாகம், மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் உப அதிபராகக் கடமை புரிந்த 57 வயதுடைய அதிபர் ஒருவர் - சுய விருப்பமின்றி இடமாற்றம் செய்யப்பட்டதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர் தான் கல்வி கற்பிக்கும், குறித்த பாடசாலையில் அதிபர் தரம் III இல் இருக்கும் ஒருவரை அதிபராக நியமித்ததோடு, அதிபர் தரம் II இல் இருக்கும் குறித்த நபருக்கு வழங்கப்படவில்லை எனக் கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, அந்தப் பாடசாலை அமைந்துள்ள கல்வி வலயத்தின் பணிப்பாளரால் தனது விருப்பமின்றி இடமாற்றம் செய்யப்பட்டது மனித உரிமைகள் மீறும் செயல் ஆகும் எனவும், 53 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவர்களது சுயவிருப்பமின்றி இடமாற்றம் செய்ய முடியாது என ஆசிரியர் இடமாற்ற சுற்று நிருபம் தெரிவிக்கின்ற போதும், குறித்த கல்வி வலயத்தின் பணிப்பாளரால் இடமாற்றம் செய்யப்பட்டமை மனித உரிமைகள் மீறும் செயல் எனவும் தெரிவித்தே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.


# கட்டடத் திணைக்களத்தில் நிலவிவரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் —

வீடமைப்பு, கைத்தொழில் கட்டுமான மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கட்டடங்கள் திணைக்களத்தால் உதவி பொறியியலாளர், நிதி உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர், மனித வள உதவியாளர் போன்ற பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராகவும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழ், உயர்கல்விச் சான்றிதழ்கள், தொழிற்தகைமைச் சான்றிதழ்கள், இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் கட்டடப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், 2 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 15.09.2005 இற்கு முன்னதாக, பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்கள் நமது ஈழநாடு அலுவலகத்தில் பார்வையிடலாம்.



வண்ணை வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் இளம்பிறையன் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம். (91)

# இளம் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர் விபரம்!

யாழ்ப்பாணம் —

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கடந்த ஜூன் மாதம் நடத்திய இளம் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோர் விபரங்கள் வெளியாகியுள்ளன. சித்தியடைந்தோர் விபரம் வருமாறு -

### இளம் சைவப்புலவர்

சியாமினி இராசரத்தினம் 2 ஆம் பிரிவு (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), கணபதிப்பிள்ளை கஜரூபன் 3 ஆம் பிரிவு (கரம்பகம் மிருசுவில்), வாகினி நாகரத்தினம் 2 ஆம் பிரிவு (உக்குழாங்குளம் வவுனியா), காயத்திரி முத்துராசா 2 ஆம் பிரிவு (50/3 குருமன்காடு - வவுனியா), சர்மிளா சதாசிவம் 2 ஆம் பிரிவு (கோயிற்புதுக்குளம், வவுனியா), இலங்கநாயகம் மயூரன் 2 ஆம் பிரிவு (கோண்டாவில் கிழக்கு), சண்முகராசா சிறிகாந்தன் 2 ஆம் பிரிவு (207 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), கல்பனா கருணாநிதி 2 ஆம் பிரிவு (111, 1 ஆம் யூனிற் முரசுமோட்டை, பரந்தன்), ஜெயசித்திரா ஜெயசிங்கம் 2 ஆம் பிரிவு (வேம்படி, காரைநகர்), சுப்பிரமணியம் இமயராஜ் 2 ஆம் பிரிவு (இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்), நடராசா திருக்குமரன் 2 ஆம் பிரிவு (இடைக்குறிச்சி கிழக்கு வரணி), துஷ்யந்தி செல்வராசா 2 ஆம் பிரிவு (குட்செட் வீதி, வவுனியா).

### சைவப்புலவர்

சுதர்சினி ஆறுமுகலிங்கம் 3 ஆம் பிரிவு (நெளுக்குளம், வவுனியா) பிரிந்தா தர்மலிங்கம் 2 ஆம் பிரிவு (வேம்பங்குளம், வவுனியா) இராசேந்திரமலர் இராசையா 3 ஆம் பிரிவு (வுவுனியா) செல்லையா பரமேஸ்வரன் 3 ஆம் பிரிவு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு) தவராசா குமரன் 3 ஆம் பிரிவு (அம்பலவாணர் வீதி, உடுவில்) வெற்றிவேலு வரதிதாசன் 2 ஆம் பிரிவு (வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை).

# கரவெட்டி செயலகத்தால் கலாசார விழா நடத்த முடிவு

யாழ்ப்பாணம் —

கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ள கலாசார விழாவை - எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விழா, பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இதில் சிறப்புரைகள் கவியரங்கு, பட்டிமன்றம், நாடகம், நாட்டிய நாடகம், நடனம், இசைக்கச்சேரி; கவியரங்கு, கலைஞர் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (13)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : பா.வக்ஷன்
முகவரி : கரவெட்டி.

### அகவை ஒன்று



பெயர் : சி.லக்ஷிகா
முகவரி : கொற்றாவத்தை.

### அகவை இரண்டு



பெயர் : நிறோஸ்
முகவரி : யாழ்ப்பாணம்.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........

முகவரி : ..........

பிறந்த ஆண்டு : ..........



கூப்பன்கள் புத்தம், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்


IBC
ஈழமுரசு
ttn
தமிழ் ஒளி
பத்திரிகை
வானொலி
தொலைக்காட்சி
இணைந்து உங்களை மகிழ்விக்கும்
ஒளி விழி திருவிழா
தமிழ் ஒளி


பசி தீர்க்க வேண்டும் சுவையுடன் உண்ணவேண்டும் செலவும் குறைய வேண்டும்
எங்கே செல்வது?
பாண்டியன் வாணிபம்
Vanybam
சுவையூற்று
தயக்கம்வேண்டாம் மயக்கம் தெளிந்து எம்மிடம் வாருங்கள்
சைவ அசைவ உண்டிகள்
மேல் நாட்டு உண்டிகள்
குளிகளியில் பலவகைகள்
சிற்றுண்டிகள்
சிறப்புணவுகள்.
குறைந்த செலவில் நிறைந்த பயன்பெறவும் மீண்டும் நீங்கள் நினைத்து நாடவும் எழும்
கிளிநகரில் வனப்பூட்டும் வண்ணமாளிகை
பாண்டியன் சுவையூற்று
யாழ் சாலை
கிளிநொச்சி
T.P:201 228 5707



உங்கள் கனவுகளை நனவுகளாக்கி
இல்லங்களை இயற்கை அழகுடன்
திகழவைப்பது
கோஸ்வே
வழங்குநர்
இளவேனில் வாணிபம்
253, யாழ் சாலை,
கிளிநொச்சி.
KENLUX


இளவேனில் வாணிபம்
முதற்தர ஆக்கங்களையே வழங்கிவரும் நாம்,
உங்கள் உயர்தரத் தெரிவுகளையே மதிக்கிறோம்.
டோக்கியோ சீமெந்து வகைகள்
மெட்ரூப் கூரைத்தகடு வகைகள்
றைனோ கூரைத்தகடுகள்
அன்ரன் பீ.வீ.சி.குழாய் வகைகள்
கல்ரெக்ஸ் உராய்வு நீக்கி வகைகள்
சொலெக்ஸ் நீரிறைக்கும் பொறிகள்
கீறோகொண்டா உந்துருளி வகைகள்
கோஸ்வே வண்ணக்குழம்பு வகைகள்
என்வற்றிற்கான வழங்குநராகவுள்ளோம் என்பதனைப்
பெரு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
கிளைகள்:
யாழ்ப்பாணம்
கிளிநொச்சி


மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்.. உங்களின் இக்காலத்தெரிவுக்கு
குமரகுரு
புடவை அழகுப்பொருள் வாணிபம்
இந்தியாவில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட அதிநவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள
நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள்
பட்டுச்சாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார்
சேலிகிற் சூட் கவுண் சேட் சூட்டிங்மற்றும்
பெரியோர்கள் சிறியோர்களுக்கான
ஆடைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்
யாழ்சாலை கிளிநொச்சி





நமது
ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
267, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.


UKAAYE
SATELLITE SYSTEMS (PVT) LTD.
யூ.கே.ஏ
Crystal Clear
digital picture
and stereo sound
since signals are
received directly
from the satellite


யாழ். நகரில்...
Annai Nagaa
Food City
உங்கள் தினசரி
அனைத்து
தேவைகளையும்
ஒரே கூரையின் கீழ்ப் பூர்த்தி செய்ய நீங்கள்
நாடவேண்டிய ஒரேஇடம்
அன்னை நாகா பூட் சிட்டி
175, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
தாராளமாய் வாங்க
ஏராளமான பொருட்கள்
ஒரு முறை விஜயம் செய்தால்
மறு முறை வரத்தூண்டும்




னப் புகைப்படங்களை
கள் விருப்பப்படி பெற்றுக்கொள்ள
கள் நாடவேண்டிய
ண்ணமுகில் சோலை
கலர் லாப்
பரவிப்பாஞ்சான்
கிளிநொச்சி.


இளந்தென்றல்
ILAMTHENDRAL
குளிரூட்டிய அறைகள்
சீன இந்திய உணவு வகைகள்
விசேட உள்ளூர் உணவு வகைகள்
உன்னத தரத்துடன் உடனுக்குடன்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாட
வேண்டிய ஒரே இடம்
இளந்தென்றல் ஓய்வகம்
புகையிரத நிலைய வீதி
கிளிநொச்சி
பிளாஸ்ரிக் நெகிழ அணைகலன்கள் உருக்கி
அலுமாரிகள் சோபா செட்டிகள் மெத்தைகள்
போன்ற அனைத்து உலகத்தரம் வாய்ந்த தளபாடங்களை
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இளந்தென்றல் அணைகலன்
A9 சாலை
கிளிநொச்சி


உங்களது வாகனத்தின் நீண்டகால
பாவனைக்கும் கவர்ச்சிகரமான
தோற்றத்திற்கும் நீங்கள் பாவிக்க
வேண்டியது சணிகை - பிலிட லக்கர்
பைன்ற் லங்கா [பிறைவேற்] லிமிட்டட்
துணை முகவர்கள்
01. நியூ கமல் செரமிக்,
37, ஸ்ரான்லித்தெரு,
யாழ்ப்பாணம்.
02. தரன் ரேடர்ஸ்,
130, ஸ்ரான்லித்தெரு,
யாழ்ப்பாணம்.
03. யாழ்ரா மேச்சனம் (தனியார்)
137, பலாலிச்சாலை,
திருநெல்வேலி.
04. பாக்கியரட்ணம் காட்வெயார்,
163 - 165, பிரதான சாலை,
சங்கானை.
05. மருதம் அயன் வெயார்ஸ்ரோர்ஸ்,
என்.எம்.எம்.வீ.தெரு,
நெல்லியடி, கரவெட்டி.


தமிழீழ வைப்பகம்
Bank of Tamileelam
BANK OF TAMILEELAM
"தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்"
1994.05.23 ஆம் நாள் முதல் மக்களின் நம்பிக்கையின் சின்னமாக செயற்பட்டு வருகிறது
எமது பணியில்.....
தேட்ட வைப்பு
நிலையான வைப்பு
பிள்ளைகள் தேட்ட வைப்பு
★ அடகுக்கடன் சேவை ★ வாணிபக்கடன்
★ இடர்பாட்டுக்கடன் ★ கதிரொளி மின்வாக்கித் தொகுதிக்கடன்
★ சுழற்சிமுறை வாணிப கடன் ★ விடமைப்புக்கடன்
★ வேளாண்மைக்கடன் ★ சுயதொழில் முயற்சிக்கடன்
★ குத்தகைக்கடன் ★ அரச ஊழியர்களுக்கான கடன்
★ கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிப்புற்ற வர்த்தகர்களுக்கான கடன்
★ கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிப்புற்ற கடற்தொழிலாளர்களுக்கான கடன்
புலம் பெயர்ந்த தாயக உறவுகளுக்காக "தாயக ஒளி" என்னும்
சிறப்பு வைப்புத் திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளது
தனது ஏனைய வைப்பகப் பணிகளுடன்
12 வது ஆண்டில் 12கிளைகளுடன் செயற்பட்டு வருகிறது
வாருங்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டுகின்றோம்



சேரன்
சேரன் வாணிபம்
தயாரிப்புக்கள்
எமது தயாரிப்புக்களான சேரன் எள்ளெண்ணை,
சேரன் சிவப்பு அரிசி, சேரன் இடியப்ப (NOODLES),
சேரன் சிவப்பு அரிசிமா, சேரன் அப்பளம்,
சேரன் குளிர்களி மற்றும் வெதுப்பக,
சுவையக உற்பத்திகள்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்
மக்களின் மகிழ்ச்சி !
சேரனின் வளர்ச்சி !
சுத்தம்! சுவை!! சுகாதாரம்!!!
ஆரோக்கியமான வாழ்விற்கு அமிர்தமானது
சேரன் தயாரிப்புக்கள்.
சேரன் வாணிபம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
தொலைபேசி (T.P) : 021-228 5770,
021-228 5771,
021-228 5709.
தொலைநகல் (FAX) : 021-228 5768


நவ நாகரீக நங்கையரின் நகைத்தெரிவுகளுக்கு
தமிழரசி நகைமாடம்
கிளிநொச்சி
தங்க நகை எதுவானாலும் எங்களிடம் வாருங்கள்
ரசி நகைமாடம்
குடியிருப்பு
மதி நகைமாடம்
குடியிருப்பு
மதி நகைமாடம்
மடு
மதி நகைமாடம்
தமிழரசி நகைமாடம்
கந்தபுரம்
தமிழ்நிலா நகைமாடம்
நெளாவி
யாழரசி நகைமாடம்
முழங்காவில்
தமிழ்மதி நகைமாடம்
வட்டக்கச்சி
அழகுநிலா நகைமாடம்
தண்ணீரூற்று
சுடர் மாணிக்கக்கல் வாணிபம்
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு


Little Asia Emporium
No - 317, 317A - Galle Road Colombo - 06
Tel - 0112-504470 / 0112-500098
திவுசு திவுசா..
புதுசு புதுசா...
ஆடைகள் வாங்க
ஆடைகளின் சோலையகம்
Little Asia Emporium

# தமிழ் மக்களின் தீர்க்கமான முடிவையே விடுதலைப்புலிகளும் எடுக்கவுள்ளனர்

## அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவிப்பு



கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்ட மக்களின் எழுச்சி நிகழ்வு எமது வரலாற்றில்முக்கியத்துவமானபதிவை ஏற்படுத்தியுள்ளது என, தமிழீழ அரசியற்துறைதுணைப் பொறுப்பாளர்சோ.தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கற்பனையிலும் கண்டிராத மக்கள் சமுத்திரம் ஆர்ப்பரித்து நிற்பதைக் கண்டு நாம் மகிழ்வுறுகிறோம். இந்த எழுச்சி மூலம் தமிழ் மக்கள் அனைவரும் விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்கள் தன்னுயிரையீந்த 17,885 பேரினதும், 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்களதும் இன்னும் பல லட்சம் பெறுமதியான சொத்திழப்புக்களையும் இழந்ததுடன், பல வதைகளுக்குள்ளாகியும், கணக்கிலடப்படாத விலை கொடுப்பு மூலம் தமது நிம்மதியான, கௌரவமான வாழ்க்கையைக் காண உத்தரவாதத்தைப் பெற்றுத் தருமாறும், அதை நாமே தமது பாதையில் தொடர்ந்து சென்று பெறுவதற்கு வழி விடுமாறும் அனைத்துத் தமிழீழ மக்களும் இங்கே அறைகூவி நிற்கின்றார்கள்.

இன்றைய கிளிநொச்சி மாவட்ட மக்கள் எழுச்சி நிகழ்வு - எமது வரலாற்றில முக்கியத்துவமான கதையை ஏற்படுத்துகின்றது. இந்த 27.07.2005 அன்று வவுனியா மாவட்டத்தில், அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி நடத்திய தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனம், இவ்வ ளவு பெரிய மக்கள் திரளான எழுச்சியின் பின்னணியைக் கொண்டதென்பதை இங்கே இந்த மக்கள் எழுச்சி அனைவருக்கும் உணர்த்தி நிற்கிறது.

இவ்வாறுதான் தமிழ் மக்கள் அனைவரும் தேசிய ரீதியாக, பரிபூரணமாகத் திரண்டுள்ளார்களஎ. எமது விடுதலைப் போராட்டத்தைப் பின்னோக்கிப் பார்த்தால், இவ்வாறான மக்கள் எழுச்சிகள் தாக்கங்களை ஏற்படுத்தியதை அவதானிக்க முடியும். 1976 ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைப் பிரகடனம் எமது போராட்டத்துக்கு உந்து சக்தியாக அமைகிறது.

அது போலவே 1987 ஆம் ஆண்டு காலகட்டத்தில் அப்போதைய இந்திய அரசால் அனுப்பப்பட்ட ஆக்கிரமிப்புப் படைகளால், எமது தேசிய விடுதலைப் போராட்டம் சிக்கித் தவித்த போது, எமது அமைப்பும் அனைத்துத் தமிழீழ மக்களும் சாத்வீக வழியில் போராடினோம். ஆனால் இறுதியில் மக்களின் பரிபூரணமான எழுச்சி, அளவிடமுடியாத உயரத்துக்கு எட்டியது.

இதுபோலவே 1990 ஆம் ஆண்டு மக்கள்பேரெழுச்சியோடு, இராணுவப் பயிற்சியைப் பெற்றதன் மூலம் ஆக்கிரமிப்புப் படைகளை நாலாதிசைகளிலிருந்தும் விரட்டியதை அனைவரும் அறிவீர்கள் இதைப்போன்றதொரு காலகட்டத்தைத் தான் இன்று இங்கு பார்க்கின்றோம்.

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக சமாதான முயற்சிகளில் அனைத்து தமிழ் பேசும் மக்களும் விரக்தியுற்று நிற்கின்றார்கள். அதன் மூலம் தமது வாழ்வில் ஏதாவது பிரயோசனம்' எட்டுமென்ற நம்பிக்கை மக்களிடம் முழுமையாக அற்றுப் போய் விட்டது. அதனாலே தமக்கு ஆயுதப் பயிற்சியை வழங்கும் படியும், பொறுமை காப்பதை விடுத்து, சுதந்திரப் போரை தொடர்ந்து சென்று , தமது விடிவை விரைவில் பெற்றுத் தருமாறு எமக்கு கடிதம் மூலம் வலியுறுத்தி வருகின்றனர்.

இதன் உச்சமான வடிவமாகவே தமிழீழ தேசிய எழுச்சிப் பிரகடனம் இன்று இந்த இடத்தில் வெளிப்பட்டு நிற்கின்றது.

மக்கள் சக்தியாக ஏற்பட்டுள்ள [illegible]ொந்தளிப்பு நிலை தொடர்பான விடயங்களை இன்று எமது தலைமைப்பீடம் உன்னிப்பாக எடுத்துள்ளது. இந்த வகையில் இந்த மண்ணின் விடிவுக்கு ஏற்ப, எமது அமைப்பு தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும் என்பதை இந்த இடத்தில் உறுதியாகக் கூற விரும்புகிறோம்.

உங்களுடைய உணர்வுகளும், உங்களுடைய எழுச்சிகளும், இந்தத் தேசத்தின் விடுதலையை விரைவாக வென்றெடுக்க உதவும் எனவும் அவர் கூறினார்.

# பச்சிலைப்பள்ளி பகுதியில் கட்டடங்கள் திறந்துவைப்பு!

பளை —

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் நீர்ப் நிறுவன நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட பிரதேசசபை அலுவலகக் கட்டடம், பொது நூலகம், ஆயுர்வேத வைத்தியசாலை போன்றவை கடந்த செவ்வாய்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளர் இ.து.சிவராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார்.

பிரதேச சபை அலுவலகத்தினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

பொதுநூலக மண்டபத்தினை கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசையமுதனும், ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உஷாவும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

# இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கும் மக்கள் நிரந்தர வீடுகள் அமைத்துத் தருமாறு கோரிக்கை

வடமராட்சி —

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமிஅனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு நிரந்தரவீடுகள்அமைப்பது கப்படுவது சம்பந்தமான மக்களுடனான கலந்துரையாடல் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடைபெற்று வருகின்றன.

இந்தக் கலந்துரையாடலின் போது தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில் -

கண்ணி வெடி அகற்றல், காணிகள் பகிர்ந்தளித்தல் ஆகிய செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டதன் காரணமாகவே நிரந்தர வீடுகள் அமைப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறினார்.

சுனாமி அனர்த்தம் நடைபெற்று 8 மாதங்களுக்கு மேலாகியும், இதுவரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கும் மக்கள் - தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் பணிப்பாளர் சண்முகலிங்கம் றஞ்சனியிடம் முறையிட்டுள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் பணிப்பாளர் சண்முகலிங்கம் றஞ்சன், விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் , வடமராட்சி கிழக்கு செயலணிப் பொறுப்பாளர் யாழமுதன், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், உதவி அரசாங்க அதிபர், கிராமஅலுவலர், ஊரக மேம்பாட்டுக் குழுவினர், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (122)

# வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு —

வடமராட்சி கிழக்கு மாமுனை - கட்டைக்காடு கடற்கரைவீதிப் புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த 19 கிலோ மீற்றர் நீளமுள்ள இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு 80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள வீதிகள் அனைத்தும் சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்து, போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

# முதலாமிடம்!

முல்லைத்தீவு —

முல்லைத்தீவுப் பிரதேச முன்பள்ளிகளுக்கிடையே நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டிகளில், அளம்பில் அன்னை வேளாங்கன்னி முன்பள்ளி முதலாமிடத்தைப் பெற்றது.

இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தைக் கள்ளப்பாடு முகிலன் முன்பள்ளியும், மூன்றாம் இடத்தை வேனாசீர் முன்பள்ளி, ஜே.ஆர்.எஸ்.முன்பள்ளி ஆகியன பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசிய எழுச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் பாராட்டுக்களும் - நன்றியும் தெரிவிப்பு!

கிளிநொச்சி —

கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் கலந்துகொண்ட எம் உறவுகளுக்கு நன்றி நவில்கிறோம் என, பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரும், தமிழ்த்தேசிய எழுச்சி செயலணிக் குழுவினரும் தமது பாராட்டுக்களையும், நன்றியையும், தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் உணர்ச்சியுடன்பங்கேற்று வரலாறுபடைத்துள்ளனர்.

எமது ஒருமித்த குரலை சர்வதேசத்துக்கும், அரசுக்கும் நாம் ஒரு கொடியின் கீழ் நிற்கிறோம் எனவும், தனியாகப் பிரிந்து தனியரசை அமைத்து வாழவிரும்புகிறோம் என்பதனை உணர்த்தியும் நின்ற எமது அனைத்து உறவுகளுக்கும் பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையினரும், தமிழ்த் தேசிய எழுச்சி செயலணிக் குழுவினரும் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காலச் சுவட்டில்...

**செப்ரெம்பர் - 03** — இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

1783 : அமெரிக்க விடுதலைப் போரில் பிரிட்டன் தோல்வியுற்றதைத் தொடர்ந்து, பாரிசில் சமாதான வரையறை உடன்படிக்கையில் பிரிட்டன் கையெழுத்திட்டது. இந்த உடன்படிக்கைப் படி அமெரிக்க விடுதலைக்கு பிரிட்டன் அங்கீகாரம் அளித்தது.

1915 : பிரிட்டன் - ஜேர்மனி போர் மூண்ட நேரம் இந்திய விடுதலைப் போரைத் துவக்க சந்தர்ப்பம் என்று கருதி ஜேர்மனி அரசின் ஆதரவைத் திரட்ட பெர்லினில் இருந்த அவினாஸ் பட்டாசார்யா, வீரேந்திர நாத் சட்டோபற்றியா என்ற இரு இந்தியப் புரட்சி வீரர்களும் ஜேர்மனி வெளிநாட்டமைச்சரைச் சந்தித்தனர்.

1916 : அமெரிக்காவில் புகையிரதப் பகுதி ஊழியர்களுக்கு எட்டு மணிநேர வேலை வழங்குவது பற்றிய ஆடம்ஸ் சட்த்தில் அமெரிக்க ஜனாதிபதி வில்ஸன் கையெழுத்திட்டார்.

1917 : யூதர்களுக்குத் தனிநாடு அமைத்துக் கொடுப்பது பற்றிப் பரிட்டிஸ் அமைச்சரவை விவாதித்தது. பெர்சியன் குடாவில் இபின் சௌத் பகுதியைக் கொடுக்கலாமென்று பிரான்ஸ் முன்வைத்த யோசனை நிராகரிக்கப்பட்டது.

1917 : இத்தாலியில் நிலக்கரிப் பற்றாக்குறையினால் 75 வீத புகையிரதங்கள் ஓடமுடியாது போனது. விறகுகளை எரித்து மிகுதிப் புகையிரதங்கள் ஓடவிடப்பட்டன.

1918 : செக்கொஸ்லோ வேகியா ஒரு தனி அரசு என்று அமெரிக்கா அங்கீகரித்தது.

✕ : காம்பிராய் டுபாய் ஆகிய பகுதிகளில் இருந்த பொது மக்கள் ஜேர்மனியால் பெல்ஜியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

1919 : 'சர்வதேச சங்கம் அமைக்கும் கொள்கைக்கு ஆதரவு திரட்ட சமாதான சகவாழ்வா? ஆயுதமேந்திய தனி வாழ்வா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்ற கோஷத்துடன் அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் உலக சுற்றுப் பயனத்தை ஆரம்பித்தார்.

1939 : இரண்டாம் உலகயுத்தம் ஆரம்பித்தது. பிரிட்டன், ஜேர்மனி மீது தாக்குதலைத் தொடங்கியது. தொடர்ந்து நியூசிலாந்து , அவுஸ்ரேலியா, பிரான்ஸ் என்பனவும் ஜேர்மனி மீது தாக்குதலை ஆரம்பித்தன. இந்தப் போர் 1946 செப்ரெம்பர் 2இல் அதிகாரபூர்வமாகமுடிவுக்கு வந்தது. மூன்றுகோடிக்கும் மேற்பட்ட படை வீரர்கள் பலியாகினர்.

1962 : உலகிலே மிக நீளமான தேசிய நெடுஞ்சாலையான பிரான்ஸ் - கனடா நெடுஞ்சாலை திறந்து வைக்கப்பட்டது. அட்லாண்டிக் கடற்கரைப்பகுதியில் இருந்து, பசுபிக் கடற்கரைப்பகுதி வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையான இதன் நீளம் 7821 கி.மீ.ஆகும்.

1970 : அமெரிக்காவின் கான் சாசில் காஃபிவில் என்ற இடத்தில் ஆலம்கட்டி மழை பெய்தது. ஒவ்வொரு கட்டியும் சராசரி 758 கிராம் நிறையுடையதாகவும், 44.5 செ.மீ. குறுக்களவுடையதாகவும் இருந்தது.

197[illegible]6 : கடந்த வருடம் இதே மாதம் ஒன்பதாம் திகதி ஏவப்பட்ட வைகிங் -2 என்ற விண்கலம் செவ்வாய்க்கிரகத்தைச் சென்றடைந்து, தான் காவிச் சென்ற கோளிறங்கு கலத்தை செவ்வாய் பரப்பில் இறக்கியது.

1994 : மொஸ்கோவில், ஆசிய, சீன அணுஆயுதத் தடை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

2001 : இனவாதம் தொடர்பில் ஐக்கி நாடுகள் சபையால் தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்ட மாநாட்டில் இருந்து அமெரிக்காவும், இஸ்ரேலும் வெளிநடப்புச் செய்தன.

**தொகுப்பு - சந்துரு**